விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 26 திங்கட்கிழமை (09.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 142

# 58 நிபந்தனைகளை
# ஐரோ. ஒன்றியம் விதிப்பு

• காணி அபகரிப்பு • பலவந்த கைது • அதிகாரபகிர்வு

(பிரசல்ஸ்)
மனித உரிமை மீறல், தமிழர் பிரதேசங்களில் காணி அபகரிப்பு, சட்டத்துக்கு புறம்பான கைது நடவடிக்கைகள், அரசியல் கைதிகளில் விடுதலை மற்றும் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட 58 நிபந்தனைகளை முன்வைத்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், இவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொண்டால் மாத்திரமே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை மீளப்பெற்றுக்கொள்ள முடியும் என்று இலங்கையிடம் இறுக்கமாக தெரிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் விமர்சனம் அரசு நிராகரிப்பு

(கொழும்பு)
முன்னாள் போராளிகளின் கைது மற்றும் முகாம்கள் தொடர்புடைய பாதுகாப்பு விடயங்களில் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.
இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசேட அறிக்கையாளர்கள் 24ஆம் பக்கம் பார்க்க....

## கிளிநொச்சியில் சிசு சடலம் மீட்பு!

(கிளிநொச்சி)
கிளிநொச்சி புளியம்பொக்கணை பகுதியில் உயிரிழந்த நிலையில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.
பரந்தன் முல்லைத்தீவு வீதியின் அருகில் ஆற்று பகுதியில் பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் 24ஆம் பக்கம் பார்க்க....

## சொல்ஹெய்முக்கு ஐ.நாவில் உயர் பதவி

(ஜெனிவா)
இலங்கையின் சமாதான தூதுவராக முன்னர் செயற்பட்டிருந்த நோர்வேயின் எரிக் சொல்ஹெய்முக்கு ஐக்கிய நாடுகளின் 24ஆம் பக்கம் பார்க்க....

## குளிர் பானங்களை பருக வேண்டாம்

(கொழும்பு)
நாட்டில் நிலவுகின்ற கடும் வெப்பநிலை காரணமாக குளிர் பானங்களையும், அதிக சீனி கலக்கப்பட்ட பானங்களையும் பருக வேண 24ஆம் பக்கம் பார்க்க....

## இணைந்த நேர அட்டவணை நேற்று கைச்சாத்திடப்பட்டது

(கொழும்பு)
இ.போ.ச - தனியார் பேருந்து இணைந்த நேர அட்டவணை அமுலாக்கல் நீண்ட காலமாக போக்குவரத்து சேவை வழங்குநர்களின் இணக்கப்பாடின்றி இழுபறி நிலையில் காணப்பட்டது. இதனை முடிவுக்கு கொண்டு வரும பொருட்டு வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் நேற்றைய தினம் வட மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் விசேட கூட்டம் ஒன்றை பிற்பகல் ஒரு மணியளவில் ஏற்பாடு செய்திருந்தார்.
இக்கூட்டத்திற்கு வட மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, வட மாகாண போக்குவரத்து அமைச்சர், அமைச்சின் செயலாளர் சத்தியசீலன், வட 23ஆம் பக்கம் பார்க்க....

## போற்றப்படும் தமிழினத்தில் பிரிவுகள் இருப்பது வேதனை

### ஒற்றுமை தேவை என்கிறார் பகவான்சிங்



23ஆம் பக்கம் பார்க்க....

## ஒற்றுமையாக செயற்பட்டால் விழவு; உதட்டளவில் மட்டும் பேசினால் அழிவு

### ரெலோவின் தலைவர் செல்வம் எம்.பி உரை

(யாழ்ப்பாணம்)
நாம் ஒற்றுமையாக செயற்பட்டால் தான் விடிவுகிடைக்கும் வெறுமனே உதட்டளவில் பேசிசெயற்பட்டால் எமது இனத்தை அடுத்தவர்களிடம் கையேந்தும் நிலைக்கு கொண்டு சென்று அழிந்து விடுவோம் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.
தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) 23ஆம் பக்கம் பார்க்க....



## டிப்பர் விபத்தில் காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)
பளைப்பகுதியில் டிப்பர் வாகனம் மோதியதில் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த வண்டில்காரர் சிகிச்சை பலன் இன்றி நேற்றையதினம் அதிகாலை உயிரிழந்துள்ளார்.
பளைகிழக்குபுலோப்பளையை சேர்ந்த 23ஆம் பக்கம் பார்க்க....

## புகையிரதம் மோதியதில் பரந்தனில் ஒருவர் பலி

(பரந்தன்)
கிளிநொச்சி பரந்தன் புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்று ஞாயிறுக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு இடம்பெற்ற புகையிரத விபத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் கிளிநொச்சி வட்டக்கச்சி பிரதேசத்தை சேர்ந்த அனுசாந் (வயது 24) என்பவர் என தெரிவிக்கப்படுகிறது தொலைபேசியில் உரை 23ஆம் பக்கம் பார்க்க....



## இன விடுதலைச் சிந்தனை சிதைக்கப்படுகிறது - சிறிதரன்

(யாழ்ப்பாணம்)
ஒரு தேசிய இனம் தனது விடுதலையை பற்றி சிந்திக்காமல் இருப்பதற்காக ஆக்கிரமிப்பாளர்கள் விரிக்கும் வலைகளில் ஒன்றுதான்;
போதைவஸ்தும், வாள்வெட்டு கலாசாரங்களுமாகும். ஒரு இனத்தினுடைய மூளையின் வலுவை இல்லாமல் செய்தல். அவர்கள் சிந்திக்கும் ஆற்றல்களை அரங்கில் இருந்து இல்லாமல் செய்தல், அவர்களுடைய அடிமனது உணர்வுகளை அழித்தல் என பலதிட்டமிடல்கள் அரங்கேறுவதாக நாடாளுமன்ற



உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.
சண்முகம் சங்கீதனின் **தாய் மொழியில் பேச நினைத்த தெலாம** நூல் வெளி 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

45ம் நாள்
அந்தியேட்டி அழைப்பு

திரவியம்
அகிலேஸ்வரன்
(அனீஸ்)

கடந்த 27/03/2016 அன்று அகால மரணமடைந்த
எங்கள் குடும்ப தலைவன்
திரவியம் அகிலேஸ்வரனின்
அந்தியேட்டி கிரிகைகள் நாளை 10/05/2016
செவ்வாய் மதியம் 12.00 மணியளவில் அன்னாரது
இல்லத்தில் இடம் பெறவுள்ளதால் அத்தருணம்
தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்தி பிரார்த்தனையில்
கலந்து கொண்டு, தொடர்ந்து நடைபெறும்
மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்
4514

5ம் கட்டை
பெரிய விளான்
இளவாலை.

தகவல் குடும்பத்தினர்
0777446505




# நீலக்கால் நண்டு குறித்து வடக்குக் கடலில் ஆய்வு

வடக்கு கடற் பிராந்தியங்களில் நீலக்கால் நண்டுகளின் பெருக்கம் தொடர்பான ஆய்வுகள் நீரியல்வள மற்றும் கடற்றொழில் திணைக்களத்தினால்முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நீலக்கால் நண்டுகளின் ஏற்றுமதியினூடாக அதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் பாலசுப்ரமணியம் ரமேஷ்கண்ணா குறிப்பிட்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக மாவட்ட ரீதியில் நீலக்கால் நண்டுகள் பெருகும் இறங்குதுறைமுகங்கள் தொடர்பில் தகவல்கள் திரட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நண்டுகள் தொடர்பாக மேலதிக ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் அதன் அடிப்படையில் யாழ்ப்பாணத்தில் நீலக்கால் நண்டுகள் கிடைக்கும் பல இறங்கு துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நண்டுகளை பிடிக்கச் செல்லும் மீனவர்கள் தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டுள்ளதாகவும் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர்பாலசுப்ரமணியம்ரமேஷ்கண்ணா மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

# சிறுமி மீது துஷ்பிரயோகம்; இளைஞன் தலைமறைவு

(கிளிநொச்சி)


கிளிநொச்சி விநாயகபுரம் பகுதியில் 13 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறுமியின் வீட்டுக்கருகில் வசித்த அம்பாள்குளம் பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரே சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளதாகவும், குறித்த சம்பவம் இரு வாரங்களுக்கு முன் இடம்பெற்றது என்றும் கூறப்படுகிறது.

இது தொடர்பில் நேற்று ஞாயிற்றுகிழமை கிளிநொச்சி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து சிறுமியின் விநாயகபுரம் வீட்



டுக்குச் சென்ற பொலிஸார் சிறுமியை மீட்டுள்ளதோடு சந்தேக நபரான தலைமறைவாகியுள்ள இளைஞனையும் தேடி வருகின்றனர். (செ-312)




உ
தில்லையம்பதியாள் துணை
சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
நாற்பத்து ஓராவது ஆண்டு வைகாசி மஹோற்சவ பெருவிழா - 2016

10.05.2016 செவ்வாய் - கொடியேற்றம்
முற்பகல் 10.00 மணி
12.05.2016 வியாழன் - அன்னச்சப்பறம்
மாலை 7.30 மணி
14.05.2016 சனி - பூச்சப்பறம்
மாலை 7.30 மணி
15.05.2016 ஞாயிறு - வசந்தோற்சவம்
மாலை 7.30 மணி
16.05.2016 திங்கள் - கைலாசவாகனம்
மாலை 7.30 மணி
19.05.2016 வியாழன் - வேட்டைத்திருவிழா
பிற்பகல் 3.00 மணி
(ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம்)
சப்பறத் திருவிழா மாலை 7.30 மணி
20.05.2016 வெள்ளி - தேர்த்திருவிழா
முற்பகல் 10.00 மணி
21.05.2016 சனி - பூரணை தீர்த்தோற்சவம்
முற்பகல் 10.00 மணி
கொடியிறக்கம் மாலை 6.00 மணி
22.05.2016 ஞாயிறு - பூங்காவனம்
மாலை 7.30 மணி
23.05.2016 திங்கள் - பிராயச்சித்த அபிஷேகம்
காலை 6.00 மணி
வைரவர் மடை மாலை 7.00 மணி

தினசரி உற்சவம் - காலை 8.30 மணிக்கு அபிஷேகம், 9.30 மணிக்கு மூலஸ்தான பூஜை, 10.00 மணிக்கு ஸ்தம்ப பூஜை, 10.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, 11.30 மணிக்கு அம்பாள் வீதியுலா வரும் காட்சி, பிற்பகல் 5.00 மணிக்கு சாயரட்சைப் பூஜை, 5.30 மணிக்கு ஸ்தம்பப் பூஜை, 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, 7.30மணிக்கு அம்பாள் வீதியுலா வரும் காட்சி.

மஹோற்சவ பிரதமகுரு : - பிரம்மஸ்ரீ நா.திவாகரக்குருக்கள் மங்கள இசை :- இளங்கோ குழுவினர் (சுதுமலை)
மஹோற்சவத்தை முன்னிட்டு தினமும் மகேஸ்வர பூஜை அடியவர்களுக்கு (அன்னதானம்) வழங்கும் வைபவமும் நடைபெறும்.
"தில்லையம்பதியாளே சிவகாமசுந்தரியே சரணம்"
தில்லையம்பதி (சி-4566) - திருக்கோயில் பரிபாலன சபை

# சமஷ்டிக் கோரிக்கையில் எதுவித தவறும் இல்லை

## சம்பந்தன் மீண்டும் வலியுறுத்தல்



(கொழும்பு)

**ஒரே நாட்டுக்குள் சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வைக் கோருவதில் எதுவித தவறும் கிடையாது என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**

சிங்கள வார இதழ் ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த நேர்காணலின் போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளதாவது, இலங்கையில் சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறை குறித்து முதலில் சிங்களத் தலைவர்களே கோரிக்கை விடுத்தனர்.

1926ம் ஆண்டு கண்டி சிங்களத் தலைவர்கள் சமஷ்டி நிர்வாகம் குறித்த கோரிக்கையை சோல்பரி ஆணைக்குழு முன்பாக முன்வைத்திருந்தனர்.

சமஷ்டி என்பது நாட்டைப் பிரிப்பதற்கு அன்றி ஒன்றிணைத்து ஆட்சி செய்வதற்கு என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

சமஷ்டி என்பது ஒரு நாடு, இரண்டு நிர்வாகம் என்பது தவிர ஒருபோதும் இரண்டு நாடுகளாக பிளவுபடுவதில்லை. உலகில் ஏராளமான சமஷ்டி இராச்சியங்கள் நடைமுறையில் உள்ளன.

வடக்கில் தற்போது விடுதலைப் புலிகள் இல்லை.

எனவே பொதுமக்களின் காணி களை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும்.

நயினாதீவில் புத்தர் சிலை அமைக்கும் விவகாரம் சட்டத்திற்கு உட்பட்டு நடைபெற வேண்டும். இனவாதிகள் கூறுவது போன்று சட்டவிரோதமாக எதனையும் மேற்கொள்ள முடியாது என்றும் சம்பந்தன் தனது நேர்காணலில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (இ-5)

சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள

## உதயங்கவுக்கு கடவுச்சீட்டு வழங்கிய நல்லாட்சி அரசு

சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ள உதயங்க வீரதுங்கவுக்கு நல்லாட்சி அரசாங்கம் புதிய கடவுச்சீட்டை விநியோகித்ததாக ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதரும் மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினரும் இலங்கை அரசாங்கத்தினால் ஆயுத பரிமாற்றம் குறித்து குற்றம் சுமத்தப்பட்டுள்ளவருமான உதயங்க வீரதுங்கவுக்கே இவ்வாறு புதிய கடவுச் சீட்டு விநியோகித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதயங்க வீரதுங்க அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தாய்லாந்து சென்றிருந்தபோது அங்கு சென்று அவரை சந்தித்திருந்தார்.

அவர் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நிலையில் அவர் வைத்திருக்கும் ராஜதந்திர கடவுச்சீட்டை(டி3643585) மீளக் கையளிக்குமாறு இலங்கை அரசாங்கம் கேட்டிருந்தது. எனினும் அவர் அதனை கையளிக்கவில்லை. இதனையடுத்து அவர் மீது இன்டர்போல் பொலிஸ் ஊடாக சிவப்பு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் உதயங்க வீரதுங்க தாய்லாந்தில் மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கப்போகிறார் என்ற செய்தியை அறிந்ததும் இலங்கை அரசாங்கம் தாய்லாந்து அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு ராஜதந்திர கடவுச்சீட்டில் அவரை நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டது. எனினும் அவர் சாதாரண கடவுச்சீட்டையே கொண்டிருப்பதாக தாய்லாந்து அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்தது.

இதேவேளை வீரதுங்க தற்போது 2015ஆம் ஆண்டு மார்ச் 6 விநியோகிக்கப்பட்ட சாதாரண கடவுச்சீட்டை (இலக்கம் என்5400885) கொண்டிருக்கிறார். 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மூன்று மாதங்களில் இந்தக் கடவுச்சீட்டு பெறப்பட்டுள்ளது.

அதுவும் ரஷ்யாவின் தூதரகம் ஊடாக இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு உரிய முறையில் அறிவிக்கப்பட்டே இந்த கடவுச்சீட்டு பெறப்பட்டுள்ளது.

இதன்போது ராஜதந்திர கடவுச்சீட்டுக்களை கொண்டிருந்த வீரதுங்கவின் மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகளுக்கும் சாதாரண கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன

இதற்கிடையில் உகண்டாவுக்கு விரைவில் செல்லவுள்ள மகிந்த ராஜபக்ஷவின் குழுவில் உதயங்க வீரதுங்கவும் இணைந்து கொள்ளப்போகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் இருந்து டுபாய் சென்று அங்கிருந்து உகண்டாவுக்கு செல்லவுள்ள ராஜபக்ஷ குழுவினருடன் வீரதுங்க டுபாயில் இணைந்துக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் இந்த தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை.(இ-5)

## மைத்திரி-மோடி சந்திப்பு டில்லியில் இடம்பெறும்



இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் எதிர்வரும் 14 ஆம் திகதி, சனிக்கிழமை சந்திப்பு இடம்பெறவுள்ளது.

புதுடில்லியில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று இலங்கை ஜனாதிபதி செயலக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள உஜ்ஜெயினில் நடைபெறும் இந்து மத விழாவில் பங்கேற்க, பாரதீய ஜனதா கட்சி சார்பில் இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அழைப்பை ஏற்று, இந்தியா செல்லும் போதே, இந்தியப் பிரதமருக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது.

பாரதீய ஜனதா கட்சியின் பொதுச்செயலர் தனிப்பட்ட முறையில் இலங்கை ஜனாதிபதிக்கான அழைப்பை நேரில் வந்து கையளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

### சு.கவின் பெரும்பாலான பொறுப்புக்கள் மாற்றம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப செயலாளர் மற்றும் உப தலைவர் பதவி என்பன உட்பட பல்வேறு பொறுப்புக்களுக்கு புதியவர்களை நியமிக்க கட்சியின் மத்திய செயற்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

கட்சியின் புனரமைப்பு நடவடிக்கையின் ஒரு அங்கமாக இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் கட்சியின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கட்சியைப் பலப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்யாத சகலரையும் அவர்களது பதவிகளிலிருந்து நீக்கிவிட்டு, கட்சிக்காக முன்னின்று உழைக்கும் திறமையானவர்களை பொறுப்புக்களில் அமர்த்துவதற்கு கட்சி நடவடிக்கை எடுத்துள்ளதாக கட்சியின் புனரமைப்பு குறித்து அக்கட்சியின் செயலாளரிடம் வினவிய போது அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார். (இ-5)

## புதிய வாக்காளர் பட்டியல் படியே உள்ளூராட்சி சபைத் தேர்தல்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மீள் திருத்தப்படும் புதிய வாக்காளர் பட்டியல்படி நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

எல்லை நிர்ணய அறிக்கையிலுள்ள குறைகளை எதிர்வரும் ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வதாக அதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு உறுதியளித்துள்ளது.

இந்தக் குழுவின் அறிக்கை கிடைக்கப் பெற்று மூன்று மாதத்துக்குள் தேர்தலை நடத்த முடியுமாக இருக்கும் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல் இம்மாதம் 16 ஆம் திகதி மீள் திருத்தம் செய்யப்பட்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் அதன் திருத்த நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும்.

செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி புதிய வாக்காளர் இடாப்பு பதிவு செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மதுபோதையில் ரகளை சப்இன்ஸ்பெக்டர் கைது

பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் குடிபோதையில் ரகளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் எப்பாவலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை அநுராதபுரம் நகருக்கு அண்மையில் உள்ள எப்பாவலையில் நடைபெற்றுள்ளது. எப்பாவலை பொது மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் சிலருடன் குறித்த நபர் வாக்குவாதப்பட்ட நிலையில், தான் ஒரு சப்இன்ஸ்பெக்டர் என்று அச்சுறுத்தி அவர்களைத் தாக்க முயற்சித்துள்ளார்.

இதனையடுத்து பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டின் பேரில் அவ்விடத்துக்கு வருகை தந்த எப்பாவலை பொலிஸார் குறித்த நபரை கைது செய்துள்ளனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது குறித்த நபர் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் சப் இன்ஸ்பெக்டராக கடமையாற்றுவது தெரிய வந்துள்ளது.

அநுராதபுரம் பதில் நீதவான் முன்னிலையில் குறித்த சப்இன்ஸ்பெக்டரை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய எழுச்சி மாநாடு நேற்று

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈபிடிபி) தேசிய எழுச்சி மாநாடு ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்புடன் நேற்று ஆரம்பமாகி நடைபெற்றது.**

முன்னதாக யாழ் மணிக்கூட்டுக்கோபுர சந்தியில் நிறுவப்பட்டுள்ள எல்லாளன், பரராஜ சேகரன், பண்டார வன்னியன் ஆகிய மூன்று மன்னர்களது உருவச்சிலைகளுக்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டதை தொடர்ந்து அங்கிருந்து மக்கள் திரள்வுடன் கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நிகழ்விடத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

அங்கு தமிழாராய்ச்சி நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் சுடரேற்றியும் வணக்கம் செலுத்தினார். தொடர்ந்து நிகழ்விடத்தில் கட்சிக் கொடியை ஏற்றி வைத்ததுடன் நினைவுச் சுடரை ஏற்றிவைத்ததை தொடர்ந்து நிகழ்வுகள் பி.ப 3 மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமானது.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவருமான சின்னத்துரை தவராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினது தேசிய எழுச்சி மாநாட்டின் பிரகடனம் அவையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன்போது அங்கு கூடியிருந்த மக்கள் தமது கைகளில் ஏந்தியிருந்த கட்சியின் கொடிகளை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்து பிரகடனத்தை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

கொள்கைப் பிரகடனத்தை கட்சியின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன் அவையில் சமர்ப்பித்திருந்தார்.

தொடர்ந்து கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பேருரை ஆற்றியிருந்தார்.

அதில் ஓர் பகுதியில் அவர் குறிப்பிடுகையில்,

இன்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை தலைமையேற்று வழி நடத்தி செல்லும் நானும் எமது கட்சியில் அங்கம் வகிக்கும் பல தோழர்களும் அன்றைய ஆயுதப் போராட்டக் களத்தில் நின்றவர்களே.

எமது மக்களின் தாயகம், தன்னாட்சி மற்றும் சுயநிர்ணய உரிமைக்காக நாம் களத்தில் நின்று இரத்தம் சிந்தி போராடியவர்கள்.



மாபெரும் அர்ப்பணிப்புக்களை ஆற்றியவர்கள்.

எமது மக்களின் விடிவுக்காக மாபெரும் சுதந்திரப் போராட்ட இயக்கமொன்றை வழி நடத்திச் சென்ற தியாக வரலாறு எமக்கு உண்டு. ஆனாலும் நாம் வெறும் உணர்ச்சி வேகத்தில் உந்தப்பட்டு உரிமைப் போராட்ட களம் நோக்கி வந்தவர்கள் அல்ல. வெறுமனே பிரிவினைவாதிகளாகவோ அல்லது குறுந்தேசிய இனவாத நோக்கிலோ ஒருபோதும் செயலாற்றியவர்களும் அல்ல.

அரசியல் காழ்ப்புணர்ச்சிகளின காரணமாகவோ அன்றி அரசியல் போட்டிகளின் காரணமாகவோ நாம் எவர் மீதும் எந்த விமர்சனங்களையும் ஒருபோதும் முன்வைப்பவர்கள் அல்ல. இத்தகைய விமர்சனங்களை நான் ஆரம்பம் தொட்டே தொடர்ச்சியாகவே முன்வைத்து வந்திருக்கிறேன்.





நாம் எமது இலக்கு நோக்கிய வழிமுறையை மாற்றிக் கொண்டவர்களே அன்றி எமது இலட்சிய பயணத்தை ஒருபோதும் கைவிட்டவர்கள் அல்ல என அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். (செ-12)

# சமஷ்டியை கோரக்கூடாது எனக் கூற எந்தக் கொம்பனுக்கும் உரிமையில்லை

## தெற்கு இனவாதிகளுக்கு மனோ பதிலடி




தெற்கில் இருக்கும் சிலமுட்டாள் இனவாதிகள், இனவாதத் தீயில் குளிர்காய்ந்து மகிந்தவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர நினைக்கிறார்கள் என தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 30ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எம்முடன் இருந்தவர்களின் பலருடைய வீரமரணங்கள் போராட்டங்கள், ஜனநாயக போராட்டங்கள், ஆயுத போராட்டங்கள் அனைத்தும் அநீதிக்கு எதிரானதாக இருந்தது. அந்த அநீதி முழுமையாக அழிக்கப்பட்டு நீதி முழுமையாக நிலைநாட்டப்படாத காரணத்தால் இன்று நாம் என்ன செய்ய வேண்டும் என்றும் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாகவும் தீர்மானம் எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். கடந்த காலத்தினைப் பற்றி பேசிக் கொண்டிருக்காமல் எமது எதிர்காலம் பற்றியும் சிந்தித்து பேசவேண்டிய தருணத்தில் இருக்கின்றோம்.

வட மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட சமஷ்டி பிரேரணை குறித்த தீர்மானத்துக்கு எதிராக தெற்கில் பல இனவாத கோசங்கள் எழுப்பப்பட்டிருந்தாலும் காலியில் மேதின கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டபோது வடக்கு மாகாண சபையினால் சமஷ்டி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதென்றால் அது ஏன் நிறைவேற்றப்பட்டுள்ளது என நாம் சிந்திக்க வேண்டும் என்ற கருத்தை சிங்கள மக்கள் மத்தியில் தெரிவித்துள்ளார். அவ்வாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்றால் அவர் சமஷ்டி முறையினை ஏற்றுக் கொண்டிருக்கின்றார் என்று அல்ல. ஆனால் அந்த கோரிக்கையை கலந்துரையாடலாக ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதுதான் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சமஷ்டி முறையிலானகோரிக்கையினை முன்வைப்பதற்கு வடக்கு மாகாண சபைக்கு முழுமையான உரிமை இருக்கின்றது.

தெற்கில் இருந்து ஒற்றையாட்சி வேண்டுமென்று கேட்கின்றார்களாயின், அதே உரிமை சமஷ்டி தேவை என கோரிக்கை விடும் உரிமை வட, கிழக்கு மக்களுக்கு இருக்கின்றது.

மேலும் தெற்கில் இருக்கும் சில முட்டாள் இனவாதிகள், அரசியலமைப்பில் ஒற்றையாட்சியை வலியுறுத்துகிறார்கள் அதை மறுக்கும் ஒரு தீர்மானத்தை கொண்டு வருவதற்கு வடமாகாண சபைக்கு உரிமையில்லை என சட்ட வல்லுனர்களை போல் பேசுகிறார்கள்.

அதேஅரசியல் அமைப்பில்தான் 13 ஆம் திருத்தம், பொலிஸ் காணி அதிகாரம் இருக்கிறது அவை எதையும் மாகாண சபைக்கு வழங்கவில்லை. அந்தவகையில் அப்பட்டமாக அரசியல் அமைப்பு மீறப்பட்டுள்ளது.

தமக்கு தேவை ஏற்படும் பொழுது அரசியல் அமைப்புக்களை மீறுவதும் அவமதிப்பது போன்ற செயல்களை செய்கிறார்கள் தமக்கு வேறு தேவை ஏற்படும்போது அந்த அரசியல் அமைப்பை புனித நூல்களாக பார்க்கிறார்கள். அரசியல் அமைப்பு புனித நூல் அல்ல. அது மக்களால் உருவாக்கப்படுவது மாற்றக்கூடியது.

சமஷ்டி கோரிக்கையை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லுங்கள். பேசிப்பார்ப்போம். ஆனால் அந்த கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்றும் அதை கோருவதுக்கு வடக்கு மாகாணத்தில் உள்ள மக்களுக்கு உரிமை இல்லை எனக் கூறுவதற்கு தெற்கில் உள்ள எந்தக் கொம்பனுக்கும் உரிமை இல்லை.

வடக்கில் இராணுவ மயப்படுத்தல், காணிகளை சுவீகரிப்பதற்கான எண்ணம் அரசாங்கத்துக்கு கிடையாது. மேல் மட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் முழுமையாக கீழ் மட்டத்துக்கு செல்லவில்லை. அதன் காரணமாக அரசாங்கத்தின் வழி காட்டல்களை மீறிபல இடங்களில் இராணுவம் பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகள் தான் தோன்றித் தனமாக நடக்கின்றார்கள் என் பதை ஏற்றுக் கொள்கிறேன்.

வடமாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

காணி சுவீகரிப்புக்கு எதிராக தேசிய அளவில் போராட்டங்களை செய்யாது சர்வதேச ரீதியில் போராடங்களை முன்னெடுங்கள். இவ்வாறு ஜனநாயக போராட்டங்களின மூலம்தான், அடிமட்ட அதிகார வர்கத்தினரை தண்டிக்க முடியும்.

புதிய அரசில் மக்கள் தேவையான மாற்றத்தினையும் பெறவில்லை, ஆனால் எவையும் நடக்கவில்லை என்றும் கூற முடியாது. அதற்கு கால அவகாசம் தேவை. அரசாங்கம் மக்களுக்கு எதிராக செயற்படுகின்றார்கள் என்றால், ஒருநிமிடமும் இந்த அரசாங்கத்துக்குள் இருக்கமாட்டேன். இன்று ஆயுதப் போராட்டம் முடிவடைந்துவிட்டது. ஜனநாயக போராட்டம், சாத்வீக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், புதியஅரசியல் அமைப்பு உருவாக்கப்படவுள்ளது. வடகிழக்கு இணைந்த சமஷ்டியை பெறுவதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பும், வடக்கு மாகாண சபையும் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும் என மனோ கணேசன் மேலும் தெரிவித்தார். (செ-9)

## கண்ணீர் அஞ்சலி



சீனிவாசகன் சுதாகரனின்
(promotion officer E.D.C.S)
கல்வி கூட்டுறவுச் சங்கம் வடமாகாணம்)

பாசமிகு தாயார்
அமரர் பரஞ்சோதி
சீனிவாசகன்
அவர்களின் மரணச் செய்தியைக்
கேட்டு பேரதிர்ச்சியுற்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தை தெரிவிப்பதோடு
அனனாரின் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.


E.D.C.S.
ஆசிரிய அங்கத்தவர்கள்
மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(4563)

# மக்கள் தவறான பிரதிநிதிகளை தெரிவு செய்துள்ளனர்-ஜே.வி.பி.

(கொழும்பு)

**மக்கள் தவறான நபர்களை தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்துள்ளதாக ஜே.வி.பிகட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.**



சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிழையானவர்களை நாடாளு மன்றிற்கு தெரிவு செய்த காரணத்தினால் நாடாளுமன்றில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இது நாடாளுமன்றில் இடம் பெற்ற முதலாவது மோதல் சம்பவம் கிடையாது. எனவே மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

இரண்டு தரப்பினதும் செயற்பாடுகள் ஆரோக்கியமானதாக அமையவில்லை.

நாட்டு மக்களுக்காக தீர்மானம் எடுக்கும் நாடாளுமன்றில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவது நாடு பாதிப்படைய ஏதுவாக அமையும்.

நாட்டின் எதிர் காலத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகவே இந்த நிலைமைகள் அமைந்துள்ளன.

நாடாளுமன்றில் மோதல் சம்பவங்கள் இடம்பெறுவது நாட்டுக்கு பிழையான முன்னுதாரணத்தையே வழங்கும்.

எனவே எதிர்காலத்தில் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது மக்கள் இதனை விடவும் கவனமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் செயற்பட வேண்டுமென விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் அவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். (இ-5)


## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்

[4393]


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 26.04.1973
மறைவு 10.04.2016

அமரர் சுசேந்திரன் செல்வதி

பாசத்துடன் எல்லோருடனும்
அன்பாகப் பழகி இன் சொல்லே பேசி
எல்லோருக்கும் இன்முகங்காட்டி
உத்தம குணத்துடன் வாழ்ந்தவரே
கண்களெல்லாம் கடலாய்ப் பொங்க
கலங்க விட்டு எங்கு சென்றீர்கள்?
அமைதியாய் மரணத்திரையினிலே
மௌனமாய் மறைந்ததேனோ?

பிரிவால் துயருறும்
அண்ணா
ஜெயக்கொடி குடும்பம்.

சூராவத்தை,
சுன்னாகம்.

## உயர்வு நினைந்து உவகை கொள்கின்றோம்



திரு. மாரிமுத்து நவநீதமணி
(BA.Dip in Ed, MED.SLPS-I)

ஆரம்பக் கல்வியது
அல்வாய் ஸ்ரீ லங்காவில்
உயர்வுக்கான கல்வியது
தேவரையாளி இந்துவில்
பட்டப் படிப்பது- யாழ்.
பல்கலைக்கழக மதில்
ஆசிரியப் பணியது- அல்வாய்
ஸ்ரீலங்காவில்-பின்பு
அதிபர் சேவையது
உடுத்துறை வித்தியாசாலையில்
மீண்டும்- அதிபர் சேவையது
தேவரையாளி இந்துவில்- இன்று
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
பருத்தித்துறை கோட்டமதில்
பல உயர்வு பெற்று பல்லாண்டு
வாழ வாழ்த்துகின்றோம்
நண்பர்கள் நாம்....

(4391)

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம்,
அல்வாய் கலை இலக்கிய நண்பர்கள்,
தலைவர் இ.குகதாஸ்

## இராசி பலன்

09.05.2016
(சித்திரை 26,திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
திருதியை முன்னிரவு 7.17 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 4.36 மணிவரை
சுபநேரம் 11.54-1.24 மணிவரை
இராகுகாலம் 7.24-8.54 மணிவரை
அட்சய திருதியை, அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக,புத | சந் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம் மாலை 5.09 இற்கு மிது-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** காரியத்தில் கண்ணும் கருத்துமாகச் செயற்படுவீர்கள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும்,ஆழ்ந்த சிந்தையுண்டு.

**இடபம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், உடல் நலம் சீராகும், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள்.

**மிதுனம்:** நண்பர்கள் தொடர்பான சில வேலைகளுக்காக அலைய நேரிடலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், இடமாற்றம், ஊர் மாற்றம் என்பன இடம்பெறலாம், திடீர் பணவரவுகளும் ஏற்படலாம்.

**கடகம்:** அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், வருமானம் பெருகி வளம் காணும் நாள், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** உற்சாகத்துடன் பணிபுரிந்து பலரது பாராட்டுக்களைப் பெறுவீர்கள், வெளிநாட்டுத் தொடர்புகள் நன்மை தரும், தொட்டகாரியங்கள் துளிர் விடும் நாள்.

**கன்னி:** மங்கையர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தொழில் போட்டிகள் மாறும், புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், திடீர் பயணங்கள் நன்மை தரும்.

**துலாம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காணவேண்டிய நாள், பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமனாகும் நாள்.

**விருச்சிகம்:** உறவினர்களின் சந்திப்பால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு:** ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக செயற்படுவர், ஆரோக்கியமான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம்.

**மகரம்:** உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.

**கும்பம்:** தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், மைத்துனர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மீனம்:** உடன் பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், குடும்பத்தார் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள்.

# வடி-மோ.சைக்கிள் மோதி விபத்து



வடி ரக வாகனம் - மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை அச்சுவேலியில் இடம்பெற்றது. இதில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை.

மேற்படி விபத்து தொடர்பிலான விசாரணைகளை அச்சுவேலிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்கள்

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது. எனவே குறித்த சான்றுப்பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 6 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டும் படி குற்றவியல் நட வடிமுறைச் சட்டக்கோவையின் 431(2) இன் பிரகாரம் இத் தால் பகிரங்கப்படுத்தப் படுகின்றது.

யாழ்ப்பாணப் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்கள்

வழக்கு இல 16318 NP HY 7224 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 17319 EP GR 3122 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.17829 NPJI 8931 இலக்க மோட்டார் சைக்கிள் , வழக்கு இல 19151 NP HW 6242 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல 21009 NPJM 3806 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.21033 EPTB 6282 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 21374 Cha No:KINETIC 14AA108254, Eng No: Keip 47FMDA 1011951 இலக்க 49CC மோட்டார் சைக்கிள், வழக்கு இல.22487 NP GS 4419 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.22487 NPGS 40 419 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 22749 NP HV 2427 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.24136 EPMT 5817 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 27464 200-5875 இலக்க முச்சக்கர வண்டி, வழக்கு இல.31135 NPXP 3425 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 34123 NP MQ 5641 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 39694 NP HK 0158 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 40092 112-1830 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.40593 NPMD 3733 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.41340 NP BCE 1201 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. A/ 267/11 Cha No: LA STXKA 17A000324X Eng No: 1001 2240 இலக்க மோட்டார் சைக்கிள்

கோப்பாய் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்கள்

வழக்கு இல. 16844 500-8595 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல. 31547 119-4762 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.32105 NPJP 6131 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.33978 500-1118 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.MC/ 470/S/16 NW XK 4340 இலக்க மோட்டார் சைக்கிள், வழக்கு இல.15144 NP GS L1331 இலக்க மோட்டார் சைக்கிள்.

மன்றின் கட்டளைப்படி யாழ்.நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)



இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியின் இயல், இசை, நாடக அரங்கு 3 ஆம் நாள் நிகழ்ச்சியில் சுவாமி விபுலாந்தர் நுண்கலைக்கல்வி நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சியில் ஒன்றான நடன நிகழ்வின் ஒரு காட்சி....

# நல்லூர் நாடகத் திருவிழா நூல் வெளியீடு 10ம் திகதி

செயற்றிறன் அரங்க இயக்கத்தின் தலைவர் தேவநாயகம் தேவானந்தின் நல்லூர் நாடகத்திருவிழா - 2015 நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் 11 ஆம் திகதி புதன் கிழமை நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆசிரியர் பா.செவ்வேள் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராகயாழ்.இந்தியத்துணைத்தூதர் ஏ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் லயன் கதிரவேல் கமலேஸ்வரன கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வின் சிறப்புரையினை நாடக அரங்கக் கல்லூரிதலைவர்குழந்தை . மசண்முகலிங்கம் நிகழ்த்துவார்.

நூல்வெளியீட்டினை யாழ்.பல்கலைக்கழகமுன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளதுடன் மதிப்பீட்டுரையினை யாழ்.பல்கலைக்கழக மொழி பெயர்ப்புக் கற்கைகள் அலகு இணைப்பாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் நிகழ்த்துவார்.

நயப்புரைகளை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரிவிரிவுரையாளர் து.இளங்குமரன் US AID/ Spice Project வடக்கு முகாமையாளர் நா.கமலதாஸ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளதுடன் ஏற்புரையினை செயற்றிறன் அரங்க இயக்கத்தின் தலைவர் தே.தேவானந்த் நிகழ்த்துவார். (இ-5)

# வீதித்திருத்த வேலையில் நாம் ஏமாற்றப்பட்டோம்

## வடமராட்சி கிழக்கு மக்கள் விசனம்

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சந்தியில் இருந்து வெற்றிலைக்கேணி மருதடி வரைக்குமானசுமார்7 கிலோமீற்றர் வீதியின் திருத்தவேலைகளில் ஏமாற்றப்பட்டு விட்டோம் என வடமராட்சி கிழக்கு போக்கருப்பு தொடக்கம் உடுத்துறை வரையிலான பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வீதி அபிவிருத்தித்திணைக்களத்திற்கு சொந்தமான வடமராட்சி கிழக்கு மருதங்கேணி சந்தியில் இருந்து வெற்றிலைக்கேணி மருதடி வரைக்குமான மேற்குறிப்பிட்ட சுமார் 7 கிலோமீற்றர் வீதியை திருத்துவதற்காக வடக்கு மாகாண சபையால்உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்ட 60 இலட்சம் ரூபா நிதியில் இருந்து இவ் வீதி திருத்தப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் முதற்கட்ட வேலைத்திட்டமாக 7 கிலோமீற்றர் வீதியின் இரு மருங்கிலும் வளர்ந்து காணப்பட்ட பற்றைகள் வெட்டி அகற்றப்பட்டன. இதன் பின்னர் 7 கிலோமீற்றர் வீதியும் கிரவல் இட்டு செப்பனிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இது தொடர்பாககுறித்த உறுப்பினர் பொதுமக்கள் சந்திப்பிலும் கூட்டங்களிலும் மக்களிடம் இது தொடர்பில் உறுதிமொழியும் வழங்கியிருந்தார்.

ஆனால் தற்போது அவ் 7 கிலோ மீற்றர் வீதியில் 3/4 கிலோமீற்றர் அல்லது ஒரு கிலோமீற்றர் வீதி மட்டும் தார் இடப்பட்டு செப்பனிடப்படவுள்ளது.

மிகுதி வீதித்திருத்தம் பின்னர் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் வடமராட்சி கிழக்கு போக்கருப்பு தொடக்கம் உடுத்துறை வரையிலான மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்ட போது வீதித்திருத்தத்திற்கென ஒதுக்கப்பட்ட 60 இலட்சம் ரூபா நிதிபோதாமையின் காரணமாகவே முழு வீதியும் திருத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது. இது தம்மை ஏமாற்றும் செயல் என போக்கருப்பு தொடக்கம் உடுத்துறை வரையிலான பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்குமாறு பாதிக்கப்பட்ட பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-64)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவில் மகோற்சவப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளன.தொடர்ந்து 19 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வேட்டைத்திரு விழாவும் ,இரவு 7.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும் ,20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் ,21 ஆம் திகதி சனிக் கிழமை தீர்த்த உற்சவமும் இடம் பெறும். (இ-5)

• • • • • • • • • • • • • • • •

சுரசாலை-நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 19 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் மாலை சப்பறத் திருவிழாவும் ,20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும். 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணிக்குதீர்த்ததிருவிழாவும்நடைபெறவுள்ளன.இ-5




# பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு திருநெறிய தமிழ் மறைக் கழகத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற பண்ணிசைப் போட்டியானது எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. அத்துடன் விண்ணப்ப முடிவுத்திகதியும் 15.05.2016 வரை நீடிக்கப்பட்டுள்ளது என ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. இப் போட்டியானது நேற்று முன்தினம் 7 ஆம் திகதி நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)



யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற ஆசிரியர் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ். வலய கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இவ் ஆசிரியர் மாநாட்டின் ஒரு பகுதியாக கண்காட்சி நிகழ்வும் நடைபெற்றது.

(படங்கள்:கு.கஜரூபன்)



சிறி மீனாட்சி
நகை அகம்
Dealers in 22 kt.
Solid Gold Jewellery
Sree
Meenakchi
Nagai Aham
இன்று நகை கொள்வனவு
செய்யும் அனைவருக்கும்
பெறுமதி மிக்க பரிசில்கள்
வழங்கப்படும்.
இல. 183,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel:- 021 222 6109
பொன் பெருகும் பொன்னாளாம் அக்ஷய திருதியை
நாளிலே 22 கரட் தங்க நகைகளை பெற்றிட இன்றே வாருங்கள்




சாரங்கா நகைமாடம்
சாரங்கா
நகைமாடம்
அக்ஷய திருதியை
அழைப்பு
09.05.2016
(இன்று
திங்கட்கிழமை)
நம்பிக்கை நாணயம்
மிக்க அசல் 22 கரட்
தங்க நகைகளின்
கடல் அரசன்
பரம்பரை பரம்பரையான
50 வருடங்களுக்கு மேல்
அனுபவம் மிக்க நம்பிக்கைக்குரிய
கைராசியான ஒரே நிறுவனம்
சாரங்கா நகைமாடம்
சாரங்கா பணப்பரிமாற்று
தனியார் நிறுவனம்
இன்று நகை கொள்வனவு
செய்யும் அனைவருக்கும்
பெறுமதி மிக்க
பரிசில்கள் வழங்கப்படும்.
வெளிநாட்டு பணப்பரிமாற்று மூலமும் நகைகள்
கொள்முதல் செய்யலாம்.
157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6972/ 021 222 8869




நியூ உதயா வின் மின்னி ஜொலிக்கும் தங்கத்தால் அட்ஷய
திருதியை வரவேற்போம்.
தங்கம் வாங்கும் போது சகல
ஐஸ்வர்யங்களையும் தரும் சுப தினமான
அட்ஷய திருதியையில் தேர்ந்தெடுக்க நவீன
டிசைன்களிலான ஆபரணங்களை எம்
உறவுகளுக்கு நியூ உதயா ஏற்படுத்தியுள்ளது.
தங்கப்பவுண் நகை வியாபாரம்
நாங்கள் நம்புகிறோம்...
ஒவ்வொரு உறவும் தங்கமான உறவு என்று
அத்தோடு குலுக்கல் முறையில் தேர்தெடுக்கப்படும்
5 அதிர்ஷ்டசாலிகளுக்கு
தங்க நாணயங்கள் வழங்கப்படும்.
மற்றும் மேலும் பெறுமதிமிக்க பரிசில்களுடன்
தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்
காலங்கள் மாறலாம் அதுபோல் நாமும்
புதிய பழக்கவழக்கங்கள், அனுபவங்கள்,
அங்கீகாரங்கள், பொறுப்புக்கள்
இந்த மாற்றங்கள் எல்லாம்
வளர்ச்சியின் ஒருபாகம்.
இருப்பினும் இப்படி ஒரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...
நியூ உதயா ஜுவல்லர்ஸ்
மூன்று பவுணுக்கு மேல்
கொள்வனவு செய்யும்
வாடிக்கையாளர்களுக்கு லக்ஷ்மி
பென்ரன் இலவசமாக
வழங்கப்படும்.
NEW Uthayaa
JEWELLERS
021 222 2031
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jwellrs
newuthayajwellrs@gmail.com
uthaya.new

# வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் முடிவுகளில் எந்தவித மாற்றுக்கருத்துக்கும் இடமில்லை

## இதற்காக போராடுவோம் என்கிறார் சிறிதரன் எம்.பி.

(பரந்தன்)

வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவதா அல்லது வைத்திருப்பதா அது அரசாங்கத்தின் வேலை. அதனை தீர்மானிப்பது தமிழ்மக்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி மீளாய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு ஊடகவியலாளரை சந்தித்த போது பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரனிடம் கடந்த முறை நடைபெற்ற அபிவிருத்தி குழு கூட்டத்தில் இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என நீங்கள் முன்வைத்த கருத்தினை வடக்கு மாகாண முதலமைச்சர் வழிமொழிந்தார். அதனை நடைமுறை படுத்துவது தொடர்பாக உங்களது கருத்து மற்றும் பிரச்சினைகள் என்ன என தொடுக்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த இடத்தில் இராணுவம் இருக்கத் தேவையில்லை, அவர்களை வைத்திருக்கவும் தேவையில்லை என அடித்து சொல்ல வேண்டியது தமிழ் மக்களின் கடமை மற்றும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதிநிதிகளுக்குரியது.

இன்றும் கூட கிளிநொச்சி கச்சேரியில் இருக்கின்ற ஒரு பகுதி இராணுவம் அதன் ஒருபகுதியை சுவீகரித்து வைத்திருப்பதை நாங்கள் அறிகின்றோம் அதேபோல் கிளிநொசசியின் நகர பகுதியிலே நாற்பது வீதமான காணிகள் இராணுவத்தின் வசமே உள்ளது. எந்த வித அபிவிருத்தி பணிகளையும் செய்யவிடாது இந்த இராணுவம்தான் இடங்களை பிடித்திருக்கிறது. ஆகவே இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துக்களும் இல்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்,

இவ்விடயத்தை நாங்கள் திரும்பத் திரும்ப சொல்லுவோம், இதற்காக போராடுவோம். இதனை செய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமை .இதனை செய்யத் தவறினால் இது கூட ஒரு விபரீதமான நிகழ்ச்சியாகவே நடந்து முடியும். இராணுவம் மக்களுக்கு எங்கே உதவி செய்கிறது. இராணுவம் மக்களை இன்னும் தொல்லைப் படுத்துகிறது. சொந்த நிலங்களை பறித்து வைத்திருக்கிறது, குடியேற விடாமல் தடுத்து வைத்திருக்கிறது, அடிக்கடி விசாரணைக்களுக்கு கொண்டு செல்கிறார்கள், சிறையிலே வைத்திருக்கின்ற கைதிகளை விடுதலை செய்ய விடாமல் தடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த நிலங்களிலே குந்தியிருந்து மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதிக்கச் செய்கிறார்கள். இதுவா மக்களுக்கு செய்கின்ற கடமை. அதனால் எமது முடிவுகளில் எந்த மாற்றுக்கருத்துக்களும் இல்லை எனவும் தெரிவித்தார். (2-312)




## ஊடக வேலைத்திட்டத்திற்கு விண்ணப்பங்கள் கோரல்

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஊடக வேலைத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை ஊடகத் துறையில் ஆர்வமும் விருப்பும் கொண்ட இளம் ஊடகவியலாளர்களை வலுவூட்டும் நோக்கில் தேசிய இளைஞர் சேவைமன்றம் ஊடக வேலைத்திட்டம் ஒன்றினை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளது. இதற்காக நேர்முகப்பரீட்சை மூலமாக தேர்ந்தெடுக்கப்படுகின்ற சிங்கள மற்றும் தமிழ் மொழி மூலங்களில் ஒருபிரிவில் 25 பேர் வீதம் 50 பேருக்கு விரிவுரைகள் மற்றும் செயன்முறை பயிற்சிகள் என்பன நிபுணத்துவம் மிக்க ஊடகக் குழுவின் மூலம் வழங்கப்படவிருப்பதும் குறிப்பிடத் தக்கது.

வானொலி, தொலைக்காட்சிகளுக்கும் மற்றும் அச்சு ஊடகங்களுக்கும் தற்போதும் பிரதேச மட்டத்தில் செய்தி வழங்குகின்ற புதியவர்களுக்கு இதில் முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளதோடு தங்களால் பூர ணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016 மே மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் உதவிப்பணிப்பாளர் (ஊடகப்பிரிவு) தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஹய்லெவல் வீதி, மஹரகம எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் மேலதிக தகவல்களுக்கு:- 011 283 9015 எனும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2-281)

## கருத்துக்களை பெற்றுக் கொள்ளல் குறித்து நடைபெற்ற கலந்துரையாடல்



தேர்தல்கள் ஆணைக் குழுவின் எதிர்கால உபாய வழிமுறையான திட்டத்தைத் தயாரிக்கும் போது அதற்காக மக்கள் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத் தேர்தல் அலுவலகத்தால் குறுகிய கலந்துரையாடல் ஒன்று கடந்த 6 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட புதிய செயலகத்தில் நடைபெற்றது. இதன் போது மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொகமட், கிளிநொச்சி மாவட்ட உதவித்தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சி.அமல்ராஜ் ஆகியோர் கருத்துரைகளைவழங்கினர். இதில்பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.(2-254)

## இராமனூரில் இடம்பெற்ற விபத்தில் சிறுவன் உட்பட நான்கு பேர் காயம்

(குருமன்காடு)

வவுனியா ஏ-9 வீதி புளியங்குளம், இராமனூர் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன் உட்பட நான்கு பேர் காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

புளியங்குளத்தில் இருந்து வவுனியா நோக்கி நேற்று முன்தினம் காலை சென்று கொண்டிருந்த தனியார் நிறுவனமொன்றிற்கு சொந்தமான ஹன்டர் வாகனமொன்று வீதியை கடந்து கொண்டிருந்த சிறுவன் மீது மோதி பின்னர், மறுபுறத்தில் சென்று கொண்டிருந்த துவிச்சக்கர வண்டிகளுடன் மோதியுளளது. இதில் துவிச்சக்கர வண்டிகளில் பயணித்த மேலும் மூவர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், விபத்தில் படுகாயமடைந்த சிறுவன் வவுனியா பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (2-250)

## அம்பலவன் பொக்கணை வீதி புனரமைக்கப்படுவது எப்போது?

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று அம்பலவன் பொக்கணை கிராம அலுவலர்பிரிவின் முதன்மை வீதிபுனரமைக்கப்படாமை தொடர்பாக அம்பலவன் பொக்கணை கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

போர்க்காலத்தில் இலட்சக்கணக்கானமக்களின் உயிர்களைக் காப்பாற்றிய எமது கிராமம் தற்போது அரசியல்வாதிகளினாலும் அதிகாரிகளினாலும் புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் இரட்டை வாய்க்கால் சந்தியிலிருந்து மாத்தளன் வரையான 8 கி.மீற்றர் வீதி குன்றும் குழியுமாகவே காணப்படுகின்றது என அவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக போக்குவரத்துச் செய்வதில் மக்கள் பெரும் இர்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போது 475 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் முதன்மை வீதி புனரமைக்கப்படாமலேயே காணப்படுகின்றது. இதன் காரணமாக முல்லைத்தீவு நகரத்திற்கும் புதுக்குடியிருப்பு நகரத்திற்கும் போக்குவரத்தில் ஈடுபடுவதில் மக்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். கடந்த 7 ஆண்டுகளில் மாவட்டச்செயலகம், பிரதேசசெயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் இவ் வீதியைப் புனரமைக்க கோரிக்கைகள் விடுத்தும் இதுவரை புனரமைக்கப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் கவனமெடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-281)

## சைவநெறி போட்டிப் பரீட்சை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் இயங்கி வருகின்ற இந்து அறநெறிப்பாடசாலைப் பேரவையானது அறநெறிப் பாடசாலைகளில் கற்பித்து வருகின்ற ஆசிரியர்களின் சமய அறிவினையும் வாண்மையினையும் மேம்படுத்தும் நோக்கில், சைவசமய போட்டிப் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளது.

அந்த வகையில் மே மாதம் திருகோணமலை மாவட்டம் மற்றும்முல்லைத்தீவுமாவட்டத்தில் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலக பிரிவின் கீழ் அமைந்துள்ள அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பரீட்சை நடை பறவுள்ளதாக அறநெறிப் பாடசாலை பேரவைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (2)






கிளிநொச்சி பொலிஸாரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றிய நீதிபதி பிரபாகரனின் ஆலோசனைக்கு அமைவாக சிறுவர் வன்முறைகள் அற்ற கிளிநொச்சியை உருவாக்குவோம் எனும் தொனிப் பொருளில் இரணைமடுவில் உள்ள நெலும்பியச மண்டபத்தில் செயலமர்வு ஒன்று நேற்றுக் காலை நடை பெற்ற போது...

(படங்கள்:- மல்லாவி, பரந்தன், செய்தியாளர்கள்)

# எதிர்காலத்தில் சமூகத்தை சீரழிக்கின்ற சமூகம் ஒன்று உருவாகி விடக்கூடாது

## கெப்பிட்டிப்பொல நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஜே.பிரபாகரன் தெரிவிப்பு

(மல்லாவி)

எதிர்காலத்தில் சமூகத்தைச் சீரழிக்கின்ற சமூகம் ஒன்று உருவாகிவிடக்கூடாது என்பதை நாம் கவனத்தில் கொண்டு சேவையாற்ற வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் முன்னாள் நீதவானும் கெப்பிட்டிப்பொல நீதவான் நீதிமன்ற நீதவானுமான ஏ.ஜே.பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

சிறுவர் வன்முறைகள் அற்ற கிளிநொச்சியை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை இரணைமடுவில் அமைந்துள்ள "நெலும்பியச" கட்டடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நான் கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவானாக கடமையாற்றியபோது, சிறுவர் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகள் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டன. இவற்றை கூர்ந்து நோக்கும் போது அவர்களுடைய குடும்பம் மற்றும் சமூக சூழல் காரணமான வழக்குகளே அதிகம் காணப்பட்டன. அச்சூழலாலேயே அவர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு சிறுவர்கள் பாதிக்கப்படுவதற்கு பெரியவர்களே காரணமாகவுள்ளனர்.

சிறுவர்கள் தொடர்பாக இறுக்கமான சட்ட நடைமுறைகள் காணப்படுகின்றன. எனவே, கடுமையான தண்டனைகளே குற்றவாளிகளுக்கு வழங்கப்படும்.

சிறுவர் உரிமைகளை பாதுகாக்க நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது. இன்றைய சிறுவர்கள் எதிர் காலத்தின் சொத்துக்கள். எதிர்காலத்தில் சமூகத்தைச் சீரழிக்கின்ற சமூகம் ஒன்று உருவாகிவிடக்கூடாது என்பதை நாம் கவனத்தில் கொண்டு சேவையாற்ற வேண்டும் எனத் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலில் சிறுவர்களுக்கான உரிமைகள், சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் வன்முறைகளை தவிர்த்தல், கட்டுப்படுத்துவதில் அரச உத்தியோகத்தரின் கடமை எனும் பலதலைப்புக்களில் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இக்கருத்துரைகளை கிளிநொச்சி முன்னாள் நீதவான் திருச்செல்வம், யோசப்பிரபாகரன், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பெர்னாண்டோ, சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் குமார இரத்தினம், பொலிஸ் பரிசோதகர் மனோச், கிளிநொச்சி வைத்திய சாலை வைத்திய பணிப்பாளர் நிசாதீரணசிங்க ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில், திணைக்கள தலைவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் கிராம சேவையாளர்கள், பொலிஸார், இராணுவத்தினர் என 500 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். (2-15-312-281)

## க.பொ.த.(சா/த),(உ/த) மாணவர்கள் கௌரவிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கள்ளப்பாடு அ.த.க பாடசாலையில் நடைபெற்றுள்ளது


முல்லைத்தீவு அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினர் இந் நிகழ்வினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிகழ்வில் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், முல்லை வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி மூனீஸ்வரன், துணுக்காய் வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் சக்திதரன், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் பிறேமகாந், முல்லைத்தீவு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் மாவட்ட பாடசாலை அதிபர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இந்நிகழ்வில் மாணவர்கள் பதக்கங்கள், சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (2-281)







தென்னமரவாடி கிராமத்தின் கிராம அபிவிருத்தி நிலையம் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர்இரா.சம்பந்தன், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் மற்றும் பல அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர். அவுஸ்திரேலியாவிலுள்ள திருகோணமலை மாவட்ட பொறியியலாளர்சங்கம், அவுஸ்திரேலியாவிலுள்ள திருகோணமலை மாவட்டமருத்துவ சங்கம் மற்றும் சிட்னி முருகன் ஆலயத்தின் சைவமன்றம் ஆகியவற்றின் அனுசரணையில் இக்கட்டடம் நிறுவப்பட்டது. மக்களுக்கான மருத்துவநிலையம், தபால்நிலையம், நூலகம் உட்பட கிராம சேவையாளர் நிலையம் என்பன இக்கட்டடத்தில் அமைக்கப்பட்டு மக்களுக்கான அனைத்து தேவைகளையும் பூர்த்திசெய்வதற்கான ஓரிடமாக இது திகழும் என தெரிவிக்கப்படுகின்றது. (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

## 2ஆயிரத்து 792 மாற்றுவலுவுடையோரும் 12 ஆயிரத்து 756 முதியோரும் உள்ளனர்

### மாவட்ட செயலக புள்ளிவிபரத்தகவலின்படி

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டாயிரத்து 792 மாற்றுவலுவுடையோரும் பன்னிரெண்டாயிரத்து 756 முதியோரும் இருப்பதாக மாவட்ட செயலக புள்ளி விபர தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியாக பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2 ஆயிரத்து 792 மாற்றுத் திறனாளிகளும், பன்னிரெண்டாயிரத்து 756 முதியோரும் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

இதன்படி கரைச்சிப்பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 434 மாற்றுத்திறனாளிகளும், 8560 முதியோரும், பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலாளர் பிரிவில் 250 மாற்றுத் திறனாளிகளும், 2661 முதியோரும், பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் 516 மாற்றுத்திறனாளிகளும் 578 முதியோரும், கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 592 மாற்றுத்திறனாளிகளும் 957 முதியோரும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-281)

## குடும்பங்களிடையே நல்லுறவை பேணுவதன்மூலம் கொள்ளைச் சம்பவங்களை கட்டுப்படுத்த முடியும்

குடும்பங்களிடையே நல்லுறவைப் பேணி தகவல்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் கொள்ளை சம்பவங்கள் போன்ற பல சம்பவங்களை தடுத்து நிறுத்த முடியும் என முல்லைத்தீவு மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்பலப்பெருமாள்குளம் கிராம மக்கள் மத்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

இங்கு மேலும்கருத்து தெரிவித்த பொலிஸார், கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். ஒரு வீட்டிலிருந்து செல்பவர்கள் பக்கத்து வீட்டில் தாம் எங்கே செல்கின்றோம். வீட்டினைப் பார்த்துக்கொள்ளுங்கள் என்ற தகவல்களை தெரிவிக்கவேண்டும். அப்போதுதான் ஒரு விழிப்புணர்வு இருக்கும்.

கிராமங்களுக்குள் புதிதாக வருபவர்கள் தொடர்பாக தகவல்கள் தெரிந்திருக்க வேண்டும். பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டிய பொறுப்பு பொருட்களுக்குச் சொந்தக்காரர்களையே சார்ந்ததாகும். எல்லாவற்றுக்கும் மேலாக கிராம மட்டத்தில் ஒரு விழிப்புணர்வு எப்போதும் அவசியம் என்றனர். (2)

## ஆட்டோவில் சென்ற இளைஞன் மீது போக்குவரத்து பொலிஸார் தாக்கினர்

### வவுனியாவில் சம்பவம்

ஆட்டோ ஒன்றில் சென்ற இளைஞன் ஒருவன் மீது வவுனியாவில் போக்குவரத்து பொலிஸார் தாக்குதல் நடத்திய சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரில் இருந்து கண்டி வீதி வழியாக பயணித்த ஆட்டோ ஒன்றினை வவுனியா, வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸார் இருவர் இடைநிறுத்தியுள்ளனர். மது போதையில் அவர்கள் வந்தார்களா என சாரதியின் வாயினை போக்குவரத்து பொலிசார் ஒருவர் முகர்ந்து பார்த்ததுடன் அவர்களது ஆவணங்களையும் சரி பார்த்துள்ளார்.

இதன்போது, குறித்த ஆட்டோவில் பின்னுக்கு இருந்து வந்த இளைஞன் மது போதையா என பலூன் வைத்து தான் பார்க்க வேண்டும். இப்படி முகர்ந்து பார்ப்பதில்லையே என தெரிவித்துள்ளார்.

இதன்போது முகர்ந்து பார்த்த போக்குவரத்து பொலிஸார் குறித்த இளைஞனை ஆட்டோவில் இருந்து இறக்கி தாக்கியுள்ளார். இதனையடுத்து குறித்த இளைஞன் பொலிஸாருடன் தர்க்கித்துக் கொண்ட போது அவ்விடத்தில் மக்கள் கூடியுள்ளனர். உடனடியாக வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு ஆட்டோவில் அவர்கள் இருவரையும் அழைத்து வந்த பொலிஸார் சமரசம் செய்ய முயன்றுள்ளனர்.

இருப்பினும் குறித்த இளைஞன் தாக்குதல் நடத்திய பொலிஸாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்திருந்ததுடன், தாக்குதல் நடத்திய பொலிஸாரின் பெயர் மற்றும் அவரது இலக்கம் என்பவற்றை தருமாறு கோரிய போதும் வவுனியா பொலிஸ் நிலையத்தில் நின்ற போக்குவரத்து பொலிஸார் எவரும் அதனை கொடுக்க மறுத்துள்ளதுடன், தாக்குதல் நடத்திய பொலிஸாரும் அதனை வழங்க மறுத்துள்ளார்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வினவியபோது, இது ஒரு சிறிய பிரச்சினை. இது தொடர்பில் நான் கருத்து கூற முடியாது. குறித்த பொலிஸார் பற்றிய விபரங்களையும் தர முடியாது என தெரிவித்திருந்தார். (2-250)


என்றும் குறையாத ஐஸ்வர்யத்தை
அள்ளித் தரும் அட்ஷய திருதியை
திருநாளாம் 09.05.2016 அன்று எமது
ரூபி ஜுவல்லறியில் தங்க நகைகளை
கொள்வனவு செய்து ஐஸ்வர்யத்தை
அள்ளிச் செல்ல அனைவரையும்
அன்போடு அழைக்கின்றோம்.
Rube Jewellery
Since 1982
ரூபி
ஜுவல்லறி
நம்பிக்கை, கைராசி
மற்றும் தரம்குன்றா
தங்கநகை உலகில் 34 வருட
அனுபவம் வாய்ந்த நாங்கள்
உலகின் எப்பாகத்தில் இருக்கும்
எமது வாடிக்கையாளர்களுக்கு
சிறந்த சேவையினை
வழங்கிக்கொண்டிருக்கின்றோம்
என்பதை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
RUBE JEWELLERS
இல: 227 - 229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 6919, 0777 344 074


ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி
Sri Sivanchchuna
Jewellery
தங்கப்பவுண் நகை
வியாபாரம்
Manufacturers
Gold jewels
பொன் சேரும் பொன்னாளாம்
அக்ஷய திருதியை நாளிலே
தங்க நகைகளை வாங்கி
ஐஸ்வரியத்தைப் பெறுவீர்
149 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 9227
Hot mobile No: 077 711 0220



PURANE JEWELLERS
பூரணி
நகை
மாடம்
அக்ஷய திருதியைக்
கொண்டாட்டம்
Since-1995
ஒவ்வொரு முறையும்
வாங்கும் போது நிச்சயப்
பரிசுகளுடன்
இந்த அக்ஷய
திருதியையை உற்சாகமாய்
மகிழ்ச்சியுடன்
கொண்டாடுங்கள்.
09.05.2016
இன்று
காலை 7.00-
இரவு 9.00
மணிவரை
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3121


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ
பிறேம்
நகைமாடம்
09.05.2016
அக்ஷ்சய திருதியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு
உங்கள் இல்லங்களில் ஐஸ்வர்யம் பெருகவும்,
செல்வம் செழிக்கவும், வளமான வாழ்விற்கு வாழ்த்துகின்றோம்.
அக்ஷ்சய திருதியை முன்னிட்டு
விஷேட விலைக்கழிவும்
அன்பளிப்புப் பொருட்களும்
வழங்கப்படும். வாடிக்கையாளர்களுக்கு குலுக்கல் முறை
மூலம் அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.
1. தங்க நாணயம்
2. குக்கர் (Gas Cooker)
3. பான் (Fan)
(மற்றும் 10 ஆறுதல்
பரிசில்கள் வழங்கப்படும்)
09.05.2016 திங்கட்கிழமை இரவு 8.00 மணி முதல்
9.00 மணிவரைக்குள் அதிர்ஷ்டம் பார்க்கப்படும்.
171, பிறேம் பிளாசா, யாழ். வீதி, மானிப்பாய். 0773039572


வீ.எம்.கே.ஜுவல்லறி
அக்ஷய திருதியை அழைப்பு
நிகழும் மங்கலகரமான துர்முகி வருடம் சித்திரைத் திங்கள் 26 ஆம் நாள் (09.05.2016) இன்றைய
நாளிலே அள்ள அள்ளக் குறையாத ஐஸ்வரியத்தை அள்ளித்தரும் அக்ஷய திருதியை எனும்
திருநாளிலே தரம், நம்பிக்கை, கைராசி அனைத்திற்கும் உரித்தான உங்கள்
ஸ்தாபனத்தில் தங்க நகைகளை பெற்று என்றுமே குறையாத இன்பத்தைப் பெற்றிட
அன்போடு அழைக்கின்றோம்.
இன்றைய தினம் நகை வாங்கும் அனைவருக்கும் பெறுமதிவாய்ந்த
அன்பளிப்புக்கள் காத்திருக்கின்றன
80/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1117, 021 222 2515.

# உகண்டா செல்கிறார் மகிந்த

## சர்வாதிகாரியான நண்பனின் பதவியேற்பில் பங்கேற்பதற்காக



(கம்போலா)

**உகண்டாவின் நீண்டகால ஜனாதிபதியான யொவேரி முசவேனியின், ஐந்தாவது பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மே 12 ஆம் திகதி இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளதாக, அவரது தனிப்பட்ட செயலர் உதித்த லொக்குபண்டார தெரிவித்துள்ளார்.**

தனது ஐந்தாவது பதவியேற்பு நிகழ்வில் பங்கேற்குமாறு, உகண்டா ஜனாதிபதி முசவேனி, ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள், பிரித்தானிய பிரதமர்,அமெரிக்க ஜனாதிபதி உள்ளிட்ட 50 நாடுகளின் தலைவர்களுக்கும், பல்வேறு பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

உகண்டாவில் ஆட்சியில் இருந்த இடி அமீனின் எதிர்ப்பாளராக இருந்த முசவேனி, இடி அமீன் ஆட்சிக்குப் பின்னர் பாதுகாப்பு அமைச்சரானார்.

1980இல் நடந்த தேர்தலை அடுத்து, அரசாங்கத்துக்கு எதிரான இராணுவம் ஒன்றை அமைத்து, 1986 ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.

அதில் இருந்து, கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சியை நடத்தி வருகிறார். இந்த நிலையில் உகண்டாவில் மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டி வருகின்றன.

2012ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த முசவேனி, விடுத்த அழைப்பின் பேரில், 2013ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ உகண்டாவுக்குப் பயணம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கதிர்காம பாதயாத்திரை செல்வச்சந்தியில் ஆரம்பம்

கதிர்காம பாதயாத்திரை எதிர்வரும் 15 இல் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதியிலிருந்து வேல்சாமி தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. 572 கிலோ மீற்றர் தூரமுடைய இப் பாத யாத்திரை மே மாதம் 23 இல் முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தை அடையவுள்ளது.

அங்கிருந்து கொக்கிளாய் புல்மோட்டையூடாக மே 31 இல் திருகோணமலையைச் சென்றடைந்து வெருகல் - மட்டக்களப்பூடாக ஜூன் மாதம் 15 ஆம் திகதி தந்தாமலையை யாத்திரிகர்கள் சென்றடையவுள் ளனர்.

பின்னர் பழுகாமம் மண்டூர் பெரிய கல்லாறு ஊடாக ஜூன் 20 இல் காரைதீவைச் சென்றடைந்து அங்கிருந்து அக்கரைப்பற்று திருக்கோவில் பொத்துவிலூடாக ஜூன் 29 ஆம் திகதி உகந்தைமலை முருகனாலயத்தை பாதயாத்திரை சென்ற டையும்.

பின்னர் யாலகாட்டுப்பாதைக்குள் பிரவேசித்து குமுக்கன்நாவடி வியாழை கட்டகாமம் வீரச்சோலை செல்லக்கதிர்காமம் ஊடாக யாத்திரிகர் ஜூலை 5 ஆம் திகதி கதிர்காமத்தைச் சென்றடைவர்.

மூவின மக்களும் பேதமின்றி தரிசிக்கும் புனித பூமியாம் கதிர்காமத்திருத்தலத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 21 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. (இ-5)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:43<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/ வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: B/3932 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 34செவ் 1இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc, MSc/அரச தொழில்<br>தொ.இ: G/4485 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 24<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L USA PR<br>தொ.இ: B/3937 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 40<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4491 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 26<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/3938 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:32செவ்4இல்<br>தகைமை/தொழில்:NCAT<br>தொ.இ: G/4498 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா:56<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/3952 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 39சூரிசெவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4488 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ரூ.50000 பெறுமதியான பொருட்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வீடு புனரமைப்பிற்காக 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

யுத்தத்தினால் தனது இரு கண்களையும் இழந்து நான்கு பிள்ளைகளுடன் பல இன்னல்களுடன் வாழ்ந்து வரும் கீரிமலை வீதி சித் தங்கேணியைச் சேர்ந்த மா.குணரத்தினம் என்பவ ருக்கு இவ் வீடு புனரமைப் பிற்கான உதவி நேற்று முன்தினம் வழங்கப்பட் டுள்ளது.

மா.குணரத்தினம் வட் டுக் கோட்டை இந்து வாலிபர் சங்கத்திடம் விடுத்த விண்ணப்பத்திற்கு அமைவாக வீடு புனரமைப்பிற்காக நேற்று முன்தினம் அவரது வீட்டில் வைத்து கூரைத் தகடுகள், சீமெந்து பைகள், கம்பிகள் மற்றும் அதற்கான கூலி உட்பட சுமார் 50 ஆயிரத்து 83ரூபா வழங்கப்பட்டுள்ளன. (இ-5)

# செய்தித்துளிகள்

## கொங்கிறீட் தூண் விழுந்து பாடசாலை மாணவன் பலி

அம்பாறை - சியம்பலாண்டுவ 9ஆம் கட்டை பகுதியில் கொங்கிறீட் தூண் விழுந்ததில் மாணவன் ஒருவன் பலியாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெறறுள்ளதாகவும், இதில் 15 வயதான மாணவனே உயிரிழந்துள்ளகதாவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த சம்பவத்தில் இன்னும் ஒரு மாணவன் படுகாயமடைந்த நிலையில் அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

## தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்

### ஜி.கே. வாசன் வலியுறுத்து

இலங்கை அரசால் தாக்கப்படும் தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு இந்திய மத்திய அரசு நிரந்தர தீர்வு காண வேண்டும் என, தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

திருவொற்றியூர் தொகுதியில் போட்டியிடும் தே.மு. தி.க. வேட்பாளர் ஏ.வி.ஆறுமுகத்தை ஆதரித்து தேரடி சந்நதி தெருவில் பேசிய வாசன் கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

## அலங்கார உற்சவம்

யாழ்.ஏழாலை அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவமும் 108 சங்காபிஷேகமும் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளன.19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும்.

தினமும் திருவிழா இரவு 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (இ-5)

## விண்ணப்பம் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் ஆரம்ப மற்றும் அடிப்படைச் சிங்களப் பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் 18 வயதைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 13.05.2016 ஆகும். விண்ணப்பங்களை www.ou.ac.lk எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாமென யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ

## கட்டடத் தொகுதி திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் வகுப்பறை கட்டடத் தொகுதி திறப்பு விழா இன்று திங்கட்கிழமை யாழ்.ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் யோ.ஜெகஆனந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

# தமிழகத்தில் மர்மதேச ஆட்சி ப.சிதம்பரம் குற்றச்சாட்டு



தமிழகத்தில் மர்மதேச ஆட்சி நடக்கிறது என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றம்சாட்டினார்.

சென்னை மயிலாப்பூரில் காங்கிரஸ் கட்சி வேட்பாளராக கராத்தே தியாகராஜன் போட்டியிடுகிறார். நேற்று முன்தினம் மந்தைவெளி சந்தை அருகே நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கராத்தே தியாகராஜனுக்கு வாக்களிக்ககோரி முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் பேசியபோது இவ்வாறு தெரிவித்தார்.

அ.தி.மு.க. தலைமை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கூட மதிப்பதில்லை. அவர்களை கருவேப்பிலைப்போல் பயன்படுத்திவிட்டு தூக்கி எறிந்துவிடுகிறார் ஜெயலலிதா. அவரது ஆட்சியில் என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. அமைச்சர்களால் கூட முதல்வரிடம் பேச முடியவில்லை. ஒரு மர்மதேச அரசு போல் தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது என மேலும் குற்றம் சாட்டினார். (இ-5)

# மீண்டும் முதல்வராக ஜெயாவால் முடியாது

## சுவாமி திட்டவட்டம்

**சொத்து குவிப்பு வழக்கில் சிறைத் தண்டனை பெறப் போகும் ஜெயலலிதாவால் மீண்டும் முதல்வராக முடியாது என ஸ்ரீபெரும்புதுார் பாஜக வேட்பாளர் மனோகரை ஆதரித்து நடந்த பிரசார கூட்டத்தில் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.**



நடைபெற உள்ள சட்டப் பேரவை தேர்தலில் ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பாக மனோகரன் போட்டியிடுகிறார். இந்த நிலையில் பாஜக வேட்பாளர் மனோகரை ஆதரித்து ஸ்ரீபெரும்புதூர் பேருந்து நிலையம் அருகே சனிக்கிழமை இரவு பிரசார கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் மத்திய அமைச்சர் சுப்பிரமணியன்சுவாமி கலந்து கொண்டு பேசுகையில், ஜெயலலிதா அரசியலுக்கு வரும் போது ஒரு ரூபாய் கூட சொத்து இல்லை, ஆனால் தற்போது அவர் வேட்புமனு தாக்கல் செய்த போது தனக்கு ரூ120 கோடி சொத்து உள்ளதாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

இதனால் அவர் சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெறப்போகிறார். ஜெயலலிதா முதல்வராக போவது இல்லை, சசிகலா தான் முதல்வராக போகிறார். எனவே அதிமுகவிற்கு வாக்களிப்பது வீண் என இவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியை பிரிக்க முடியாது-ஸ்ராலின் பேச்சு



தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணியை பிரிக்கமுடியாது என்று மதுரை பிரசார பொதுக் கூட்டத்தில் மு.க. ஸ்ராலின் தெரிவித்துள்ளார்.


மதுரை யாதவர் கல்லூரி எதிரில் நேற்று முன்தினம் நடந்த தி.மு.க.- காங்கிரஸ் பிரசார பொதுக் கூட்டத்தில் காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தியுடன் கலந்து கொண்டு, தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்ராலின் தேர்தல் பிர சாரம் செய்தார். அவர் பேசியதாவது,

காங்கிரஸ்-தி.மு.க. ஆகிய 2 கட்சிகளும், தலைநிமிர்ந்து நிற்க வேண்டும், சகோதர மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் என்ற கொள்கைகளுடன் இருக்கின்றன. இந்த 2 கட்சிகளும் இரட்டை குழந்தைகள். உற்ற தோழர்கள். ஒட்டிப்பிறந்த இரட்டை குழந்தைகளை பிரிப்பது கஷ்டம். அதுபோலத் தான் எங்கள் கூட்டணியை பிரிக்க முடியாது. இந்த 2 கட்சிகளும் இணைந்து தமிழகத்தில் பல நல்ல திட்டங்களை நிறைவேற்றி தந்திருக்கின்றன. பொருளாதாரத்தை தலை நிமிர செய்தது, மதச்சார்பற்ற ஆட்சி நடத்தியது என பல் வேறு சாதனைகளை செய்துள்ளது. வேறு யாரும் இது போல செயற்பட முடியாது. தமிழகத்திலும் பல அரிய திட்டங்களை இந்த கூட்டணிகட்சிகள்செய்துள்ளன.

இதே மதுரையில் கடந்த 2-7-2005 அன்று கருணாநிதி, சோனியா, அப்போதைய பிரதமர் மன்மோகன்சிங் ஆகியோர் ரூ.2 ஆயிரத்து 427 கோடி மதிப்பீட்டில் சேது சமுத்திர திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

ஆனால் தமிழகத்தின் தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா, சேது சமுத்திர திட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து நிறுத்திவிட்டார். (இ-5)

# பேருந்து பாதாளத்துக்குள் பாய்ந்த விபத்தில் 12 பயணிகள் உயிரிழப்பு



இமாச்சலப் பிரதேசம் மாநிலத் தில் உள்ள சிம்லா அருகே பயணிகள் பேருந்து பாதாளத்துக்குள் பாய்ந்த விபத்தில் 12 பேர் பலியாகினர்.

இமாச்சலப் பிரதேசம் மாநில அரசுக்கு சொந்தமான அந்த பேருந்து, 55 பயணிகளுடன் ரேகாங்பியோ நகரை நோக்கிநேற்று முன்தினம் சென்று கொண்டிருந்தது. சிம்லா நகரில் இருந்து சுமார் 210 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மன்டி மாவட்டம், ஜோகிந்தர் நகர் அருகே மலைபாங்கான வீதியில் குறுகிய வளைவை கடந்தபோது, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பேருந்து, வீதியோரம் உள்ள பாதாளத்துக்குள் பாய்ந்தது.

இந்த விபத்தில் பேருந்தின் இடிபாடுகளுக்குள் சிக்கிய 12 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். காயமடைந்த 36 பேர் அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது. (இ-5)

பாரதச் செய்தி

# கருத்துக்கணிப்புக்களை யாருமே நம்பவேண்டாம்

## வைகோ வேண்டுகோள்

(சென்னை)

தமிழகத்தில் மாற்றத்தை கொண்டுவருவது என் பேரப்பிள்ளைகளே உங்களின் கைகளில்தான் இருக்கிறது என்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

கருத்துக்கணிப்புகளை நம்பவேண்டாம் என்றும், வரப்போகும் சந்ததியை காப்பாற்ற இதை விட வேறு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்றும் வைகோ உருக்கமாக பேசியுள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கு இன்னும் சில தினங்களே உள்ளது.

திமுகவிற்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என்று ஊடகங்களில் கருத்துக்கணிப்புகள் வெளியாகி வருகின்றன.

மக்கள் நலக்கூட்டணி 10 சதவிகித வாக்குகள் மட்டுமே பெற வாய்ப்பு உள்ளது என்றும் சில இடங்களில் மட்டுமே 20 சதவிகித வாக்குகள் வரை பெறும் என்றும் அந்த கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த கருத்துக்கணிப்புகள் பொய் என்றும் இதை நம்ப வேண்டாம் என்றும் உருக்கமாக பேசியுள்ளார் வைகோ.

சில ஊடகங்களில் கருத்துக் கணிப்புகள் என்ற பெயரில் வரும் தகவல்களை எல்லாம் நம்பாதீர்கள். பெரு மழையில் சென்னை சிக்குண்டபோது, இளைஞர்கள் தான் மக்களைக் காத்தார்கள்.

எகிப்தில் ஏற்பட்டதைப் போல அலைபேசி புரட்சியாளர்கள் தான் தமிழ்நாட்டில் மிகப் பெரிய மாற்றத்தைக் கொண்டு வரப்போகிறவர்கள் என்றார். (இ-5)

# மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு ஐ.நாவை நாடவேண்டும்

## பழ.நெடுமாறன் வலியுறுத்து



இலங்கைச் சிறையிலுள்ள தங்கச்சிமடம் பகுதி நாட்டுப் படகு மீனவர்கள் 21 பேரை விடுவிக்க மத்திய அரசை வலியுறுத்துவேன் என, தமிழக தேசிய முன்னணி நிறுவனத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 21 நாட்டுப்படகு மீனவர்களின் குடும்பத்தினரையும் சனிக்கிழமை சந்தித்து ஆறுதல் தெரிவித்த அவர், பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து கடந்த ஏப்ரல் 27ம் திகதி கடலுக்குச் சென்ற நாட்டுப்படகு மீனவர்கள் 21 பேரை இலங்கைக் கடற்படையினர் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர்.

தமிழக மீனவர்களைப் பாதுகாக்க மத்திய அரசு தவறியுள்ளது. இரு நாட்டு மீனவர்களும் சுமுகமாக பேச்சு வார்த்தை தொடங்க மத்திய அரசு முன்வர வேண்டும். இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்திய அரசு ஐ.நாவை நாட வேண்டும்.

மீனவர்களின் பிரச்சினையை தமிழகத்தின் பிரச்சினையாகக் கருதி, அனைத்து அரசியல்கட்சியினரும்ஒன்றாகக் குரல் கொடுக்க வேண்டும். சிறையிலிருக்கும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு நிவாரணத் தொகையை உடனே வழங்கவேண்டும்.

மேலும், இலங்கைச்சிறையிலுள்ள 21 மீனவர்களையும் விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கூறிய அவர், அதற்கு வலியுறுத்தப் போவதாகவும் தெரிவித்தார். (இ-5)

## எங்கள் நாட்டு இறையாண்மைக்கு அச்சுறுத்தல் நேர்ந்தால்தான்

# அணுஆயுதங்களை பயன்படுத்துவோம்



## வடகொரியா அறிவிப்பு

(பியாங்யாங்)

**எங்கள் நாட்டு இறையாண் மைக்கு அச்சுறுத்தல் நேர்ந்தால்தான் அணு ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் எச்சரிக்கையுடன் அறிவித்துள்ளார்.**

ஆளும் தொழிலாளர் கட்சி மாநாட்டின் இரண்டாம் நாளான நேற்று முன்தினம் அந் நாட்டு மக்களிடையே உரை யாற்றிய அவர், 'அணு ஆயுதங் களை கைவசம் வைத் துள்ள, பொறுப்புகள் மிகுந்த நாடு என்ற வகையில், எங்கள் நாட்டின்மீது அணு ஆயுதங்களை பயன் படுத்தி மூர்க்கத்தனமாக பிற நாடுகள் தாக்கு தல் நடத்த வந்தால், அதன் மூலம் எங்கள் நாட்டு இறையாண் மைக்கு அச்சுறுத்தல் நேர்ந் தாலன்றி, நாங்களாக அணு ஆயுதங்களை பயன் படுத்த மாட்டோம்' என தெரிவித் தார்.

மேலும், அணு ஆயுத குறைப்பு தொடர்பான சர்வதேச நிர்ப்பந்தங்கள் விவகாரம் தொடர்பாக நேர்மையான வகையில் ஒத்துழைப்பு வழங்கவும் உலகளாவிய அளவில் அணு ஆயுத பரவலை அமுல்படுத்தவும் வடகொரியா தயாராக இருப்பதாகவும் கிம் ஜாங் உன் தெரிவித்தார். (இ-5)

## வடகொரியா ஐந்தாவது முறையாகவும் அணுகுண்டு சோதனைக்கு தயாராகிறது

### செயற்கைக்கோள் படத்துடன் அமெரிக்கா தகவல்

(வோஷிங்டன்)

வடகொரியா, பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வருகிறது. இருப்பினும் 2006 ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளின் எதிர்ப்பினை பொருட்படுத்தாமலும், சர்வதேச ஒப்பந்தங்களை புறக்கணித்தும் அணு ஆயுத சோதனைகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

அந்த நாடு தொடர்ந்து 3 முறை அணுகுண்டு சோதனைகளை நடத்தியுள்ளது. அதைத தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 6 ஆம் திகதி, அதிரடியாக அணுகுண்டை விட பல மடங்கு சக்திமிக்க ஐதரசன் குண்டு வெடித்து சோதித்தது. இதுவும் அணுகுண்டு வகையில்தான் கணக்கில் கொள்ளப்படுகிறது. அதன்படி அந்த நாடு 4 முறை அணுகுண்டு சோதனைகளை நடத்தி உள்ளதாக சர்வதேச நாடுகள் பதிவு செய்து கொண்டுள்ளன.

இதன் காரணமாக அந்த நாட்டின் மீது ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலும், அமெரிக்காவும் மிகக்கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளன. ஆனாலும் அந்த நாடு, தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை விடாமல் நடத்தி வருகிறது.

தற்போது, வடகொரியாவின் தலைநகரான பியாங்யாங் நகரில் 36 ஆண்டுகளில் முதல் முறையாக ஆளும் தொழிலாளர் கட்சி மாநாடு நடந்து வருகிறது. இதில் பேசிய அந்த நாட்டின் ஜனாதிபதியான கிம் ஜாங் உன், அண்மையில் நடத்தப்பட்ட ஐதரசன் குண்டு சோதனையை வெகுவாக பாராட்டினார்.

இந்த நிலையில்வடகொரியா தொடர்ந்து 5 ஆவது முறையாக அணுகுண்டு சோதனைக்கு தயார் ஆகி வருவதாக செயற்கைக்கோள் படம் ஒன்றை மேற்கோள் காட்டி அமெரிக்கா தகவல் வெளியிட்டுள்ளது.

இது குறித்து அந்த நாட்டின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் மேம்பட்ட சர்வதேச ஆய்வு கல்லூரியின் 'தி 38 நார்த் வெப்சைட்', வெளியிட்டுள்ள அறிக்கையில், "வடகொரியாவில் அணுகுண்டு சோதனை நடத்துகிற இடத்தில் அத்தகைய சோதனை நடக்கிறபோது மட்டுமே காணப்படுகிற வாகன போக்குவரத்து நடைபெறுவதை காட்டும் செயற்கைக்கோள் படம் வெளியாகியுள்ளது. இது அடிக்கடி காண முடியாத காட்சி. தற்போது நடைபெற்று வருகிற ஆளுங்கட்சி மாநாட்டின் இடையேகூட அணுகுண்டு சோதனை நடைபெறலாம். 5 ஆம் திகதி எடுக்கப்பட்டுள்ள புங்க்யேரி சோதனை தளத்தின் படங்கள், வடகொரியா அணுகுண்டு சோதனை நடத்தப்போவதை காட்டுகிறது" என கூறப்பட்டுள்ளது. இது சர்வதேச அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து சுட்டிக்காட்டி அமெரிக்க அரசின் மூத்த அதிகாரி ஒருவரை கேட்ட போது அவர், "இத்தகைய செயற்பாடுகளை வடகொரியா நிறுத்திக் கொள்ள வேண்டும. அணு ஆயுத சோதனைகளை கைவிட வேண்டும். அணு ஆயுதங்களை தவிர்க்க வேணடும் என்ற சர்வதேச ஒப்பந்தங்களின்படி அந்த நாடு நடந்து கொள்ள வேண்டும்" என தெரிவித்தார். (இ-5)




## ஹமாஸ் போராளிகளின் தாக்குதலுக்குப் பதிலடி

### காஸா பகுதியில் ரொக்கெட்டுக்களை ஏவி இஸ்ரேல் தாக்குதல்



(ஜெருசலேம்)

இஸ்ரேல் பகுதிக்குள் மோட்டார் ரக குண்டுகளை வீசி ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடியாக காஸா பகுதயில் ஹமாஸ் போராளிகளின் ஆதிக்கத்தில் உள்ள காஸா ஸ்டிரிப் பகுதியில்ரொக்கெட்களை ஏவி இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியது.

இஸ்ரேல்நாட்டுக்கும்பாலஸ்தீனத்துக்கும் இடையில் உள்ள காசா எல்லையில் ஆதிக்கம் செலுத்திவரும்ஹமாஸ்போராளிகள் அவ்வப்போது இஸ்ரேல் பகுதிக்குள் ஏவுகணைகளை வீசி அதிரடியாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

மேலும், இஸ்ரேல்இராணுவத்தினரை கொல்லும் முயற்சியில் ஈடுபட்டதாக ஹமாஸ் போராளிகள் இஸ்ரேல் எல்லையில் கொல்லப்பட்டதாக அடிக்கடி செய்திகள் வெளியாகி வருகிறது. இந்நிலையில், கடந்த மூன்று நாட்களாக இஸ்ரேல் பகுதிக்குள் மோட்டார் ரக குண்டுகளை வீசி ஹமாஸ் போராளிகள் அதிரடியாக தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு பதிலடி தரும் வகையில் காஸா பகுதியின் மீது நேற்று அதிகாலை இஸ்ரேல் இராணுவம் ரொக்கெட்களை வசி தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் ஹமாஸ் போராளிகள் தரப்பில் ஏற்பட்ட சேதம் தொடர்பான உடனடி தகவல் ஏதும் வெளியாகவில்லை. (இ-5)

## அதிசயம் ஆனால் உண்மை

**இரட்டையர்கள் இருவர் இரட்டையர் களையே திருமணம் முடிக்க இரட்டையர்கள் இருவருக்கும் இரட்டையர்களே பிறந்துள்ளனர்.**



Twins married twins and born twins too

## சீனாவில் காந்த சக்தியில் இயங்கும் ரயில்

சீனாவில் அதிவேகமாக இயக்கப்படும் புல்லட் ரயில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது காந்த சக்தியால் இயங்கும் ரயில் இயக்கப்படவுள்ளது. சாங்ஷா நகரில் ஓடும் இந்த ரயில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது.

ஹ்னான் மாகாணத்தில் உள்ள சாங்ஷா நகரில் இயக்கப்பட உள்ள மிக வேகமான இந்த ரயில் ரயில் நிலையத்துக்கும், விமான நிலையத்துக்கும் இடையேயான 18.55 கி.மீற்றர் தூரத்தை சுமார் 19 நிமிடம் 30 விநாடிகளில் கடக்க கூடியது. இடையில் ஒரு நிறுத்தத்தில் மட்டுமே நிற்கும்.

மணிக்கு 100 கி.மீற்றர் வேகத்தில் இயங்கும் திறன் படைத்த இந்த ரயிலில் 365 பேர் பயணம் செய்யலாம். இது அடுத்த மாதம் முதல் ஓடத் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றொரு நகரமான சாங்சங் நகரம் 3 விதசக்திகளால் இயங்கும் ரயிலை இயக்க தயாராக உள்ளதாக தெரிவிக கப்பட்டுள்ளது. (இ-5)






# ஆப்பிழுத்த குரங்கு

ஒரு காட்டில் குரங்கு ஒன்று தனியாக வசித்து வந்தது. அது மிகவும் குறும்புகாரக் குரங்காக இருந்தது. பின் விளைவுகளை எண்ணாமல் மிகுந்த குறும்புத்தனம் செய் யும்.

அந்த குரங்கு வசித்த அந்த காட்டுப் பகுதிக்குள் ஒரு விறகு வெட்டியும் வசித்து வந்தான். அவன் மரங்களை பெரிய துண்டுகளாக வெட்டிவந்து, அவற்றை தன் குடிசை அருகே வைத்து கோடரியால் பிளந்து அடுப்பில் வைக்கக் கூடியதாக சிறு துண்டுகளாக்கி, அவற்றை பக்கத்து கிராமங்களுக்குக் கொண்டு சென்று விற்று அதைக்கொண்டு குடும்பம் நடத்தி வந்தான். அவன் மரத்துண்டுகளைப் பிளப்பதற்க்கு ஆப்புகளைப் பாவிப்பது வழக்கம். ஆப்பு என்பது V வடிவமான மரம் அல்லது இரும்பினால் ஆன ஒரு பக்கம் ஒடுக்கமாகவும் மற்றப் பக்கம் அகலமாகவும் உள்ள ஒரு ஆயுதம்.



ஒருநாள் வழமைபோல் ஒரு பெரிய அடிமரத்துண்டை கோட ரியால் பிளக்க ஆரம்பி த்தான். அவனுக்கு களைப்பு வந்ததால் அடி மரத்தின் பாதியளவு பிளந் திருந்த பிளவு க்கு இடையில் ஆப்பு போல் ஒரு மரச்சக்கையை வைதது விட்டு ஓய்வெடுக்கச் சென்றான்.

விறகு வெட்டியின் செயலை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருந்த குரங்கு அவன் சென்றவுடன் கீழே இறங்கி வந்தது.

விறகு வெட்டி விட்டுச் சென்ற மரத் துண்டின் மீதேறி மரத்தில் இறுக்கி இருந்த ஆப்பை நோக்கியவாறு அமர்ந்தது. அப்போது பிளவுபட்ட பகுதியில் அதன் வால் முழுவதும் செறிருந்தது. குரங்கு ஆப்பை இழுக்கும் அவதானத்தில் இருந்ததால் தனது வால் மரத்துண்டின் பிளவில் போயிருப்பதை உணரவில்லை. பின் தனது குறும்பு வேலையைச் செய்ய ஆரம்பித்தது. மரப்பிளவு இறுகாமல் செருகி இருந்த ஆப்பை தன் முழுப் பலத்தையும் பாவித்து ஆட்டி ஆட்டி எடுக்க முயற்சி செய்த்து.

திடீரென்று அந்த ஆப்புத்துண்டு குரங்கின் கையோடு வந்துவிட்டது. உடனே பிளவுபட்ட மரத்துண்டு சுருங்கிக் கொண்டது. பிளவுக்குள் தொங்கியிருந்த வால் நசுங்க குரங்கு அலறியது. ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மரவெட்டி அலறல் கேட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தான். அதற்குள் குரங்கு் வலி தாங்காமல் பரிதாபமாக மாண்டு போனது.

## 05.2016 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1502 - கொலம்பஸ் புதிய உலகிற்கான தனது கடைசிப் பயணத்தை (1502-1504) ஸ்பெயினில் இருந்து தொடங்கினார்.
- 1671 - ஐரிஷ் இராணுவ அதிகாரியான தோமஸ் பிளட் லண்டன் கோபுரத்தில் ஆங்கிலேய அரச நகைகளைக் களவெடுக்க முனைந்தபோது கைது செய்யப்பட்டான்.
- 1874 - குதிரையால் செலுத்தப்படும் உலகின் முதலாவது பயணிகள் வண்டி (omnibus)
- 1914 - துடுப்பாட்டத்தில் 3000 முதற்தர விக்கெட்டுகளைக்கைப்பற்றிய பெருமையை ஜாக்ஹோ்ண பெற்றார்.
- 1919 - இலங்கையில் முதன் முதலாக உணவுக கட்டுப்பாடு அமுலுக்கு வந்தது. அரிசிப் பாவனை மாதமொன்றிற்கு சராசரியாக 30,000 தொன இலிருந்து 20,000 ஆகக் குறைககபபட்டது.
- 1920 - போலந்து இராணுவம் உக்ரேனின் கீவ் நகரைக் கைப்பற்றிய வெற்றி நிகழ்வு கிரெசாட்டிக் நகரில் இடம்பெற்றது.
- 1927 - கன்பராவில் அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்றம் திறந்துவைக்கப்பட்டது.
- 1933 - மகாத்மா காந்தி தனது சட்டமறுப்பு இயக்கத்தைக் கைவிட்டார்.
- 1936 - இத்தாலி அடிஸ் அபாபா நகரை மே 5 இல் கைப்பற்றிய பின்னர். எரித்திரியா, எதியோப்பியா, இத்தாலிய சோமாலிலாந்து ஆகிய நாடுகளை இணைத்து இத்தாலிய கிழக்கு ஆபிரிக்கா என்ற நாடு உருவாகியது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: டென் ஹெல்டர் என்ற இடத்தில் பிரெஞ்சு நீரமூழ்கிக் கப்பலை ஜெர்மனிய யு-9 நீர்மூழ்கிக் கப்பல் தாக்கி மூழ்கடித்தது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனியன் யு-110 நீர்மூழ்கிக்கப்பலை பிரித்தானியக் கடற்படையினர் தாக்கிக் கைப்பற்றினர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: உக்ரேனில் சின்கிவ் நகரில் 588 யூதர்கள் நாசிகளினால் கொல்லப்பட்டனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் ஒன்றியம் வெற்றி நாளைக் கொண்டாடியது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் கடைசி ஜெர்மன் படைகள் சோவியத் தளபதி கியோர்கி சூக்கொவ் இடம் சரணடைந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியாவில் நிலை கொண்டிருந்த ஜெரமனியப் படைகள் நிபந்தனையின்றி சரணடைந்தனர். சிலொவேனியாவில் போர் முடிவுக்கு வந்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜெர்மனிய இராணுவத் தளபதி ஹேர்மன் கோரிங் அமெரிக்க இராணுவத்தால் கைப்பற்றபபடடான்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் பிராக் நகரை அடைந்தன.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: கால்வாய் தீவுகள் பிரித்தானியரால் விடுவிக்கப்பட்டன.
- 1945 - கிழக்குப் போர்முனை: இரண்டாம் உலகப் போர் ஐரோப்பாவில் முடிவுக்கு வந்தது.
- 1955 - பனிப்போர்: மேற்கு ஜெர்மனி நேட்டோவில் இணைந்தது.
- 1980 - புளோரிடாவில் லைபீரியாவைச் சேர்ந்த சரக்குக் கப்பல் பாலம் ஒன்றில் மோதியதில பாலம் சேதமடைந்ததில் 35 பேர் கொல்லப்பட்டனர்.
- 1985 - காரைக்குடியில் அழகப்பா பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டது.
- 1987 - போலந்து பயணிகள் விமானம் வார்சாவில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 183 பேர் கொல்லப்பட்டனர்.
- 2002 - ரஷ்யாவில் காஸ்பீஸ்க் என்ற இடத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 43 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 மே 09ம் தேதி தினகரன் தமிழ் நாளித ழில் வெளியான சர்வே காரணமாக திரா விட முன்னேற்ற கழகத்தில் ஏற்பட்ட உட்கட்சி பிரச்னையால் மதுரையில் இருந்த தினகரன அலுவலகம் தாக்கப்பட்டதில் தினகரன் ஊழியர்கள் 3 பேர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள

- 1408 - அன்னமாச்சாரியார், கருநாடக இசைக் கலைஞர். (இ. 1503)
- 1866 - கோபால கிருஷ்ண கோகலே இந்திய சுதந்திர போராட்ட வீரர். (இ.1915)
- 1954 - மல்லிகா சாராபாய் இந்திய சமூக ஆர்வலர்.

### சிறப்பு நாள்

- ரஷ்யா - வெற்றி நாள். (1945)
- ஆர்மேனியா - வெற்றி நாள்
- ஐரோப்பிய ஒன்றியம் - ஐரோப்பிய நாள்

## ஐரோப்பிய ஒன்றியம் - ஐரோப்பிய நாள்

ஐரோப்பிய ஒன்றியம் அல்லது ஐ.ஒ (European Union EU) என்பது தற்பொழுது 28 உறுப்பு நாடுகளைக் கொண்ட, நாடு தாண்டிய அரசிடை அமைப்பாகும். 1992 இல் நிறுவப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய உடன்பாட்டை (மாசுடிரிச் ஒப்பந்தம் என்றும் பரவலாக அறியப் படுகிறது) அடுத்து இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. எனினும், 1950கள் முதற்கொண்டே இயங்கி வந்த பல்வேறு முன்னோடி அமைப்புகளின் செயற்பாடுகள், ஐரோப்பிய ஒன்றியத்தை ஒத்து இருந்தன. ஏறத்தாழ 500 மில்லியன் குடிமக்களைக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் உலகத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30% ஐ உருவாக்குகின்றன.

ஐரோப்பிய ஒன்றியம், தனது உறுப்பு நாடுகளிடையே மக்கள், பொருட்கள், சேவைகள், முதலீடு ஆகியவற்றின் கட்டற்ற நகர்வுகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் பொதுவான சட்டங்களைக் கொண்ட ஒற்றைச் சந்தையை உருவாக்கியுள்ளது. இது பொதுவான வணிகக் கொள்கை, வேளாண்மை, மீன்பிடிக் கொள்கைகள் என்பவற்றுடன் பிரதேச வளர்ச்சிக் கொள்கையையும் பேணி வருகின்றது. பதினைந்து உறுப்பு நாடுகள் யூரோ எனப்படும் பொதுவான நாணய முறையையும் ஏற்றுக்கொண்டுள்ளன. இது ஒரு வெளிநாட்டலுவல்கள் கொள்கையொன்றையும் உருவாக்கியுள்ளதுடன், உலக வணிக அமைப்பு, ஜி8 உச்சி மாநாடு, ஐக்கிய நாடுகள் அவை என்பவற்றிலும் சார்பாண்மை (representation) கொண்டுள்ளது. 21 ஐரோப்பிய ஒன்றிய நாட்டுகள் "நேட்டோ" அமைப்பிலும் உறுப்பு நாடுகளாக உள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உறுப்பு நாடுகளின் நீதியமைப்பு, உள்நாட்டு அலுவல்கள் ஆகிய்வற்றிலும் பங்களிப்புகள் உண்டு. செஞ்சென் ஒப்பந்தத்தின் (Schengen Agreement) கீழ் சில உறுப்பு நாடுகளிடையேயான கடவுச்சீட்டுக் கட்டுப் பாட்டு முறையும் ஒழிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், முடிவுகளை எடுப்பதில் அரசுகளிடையான இணக்கப்பாடு, அரசுகளுக்கு அப்பாற்பட்டு இயங்கும் அமைப்புக்கள் ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலப்பு முறையைக் கைக்கொள்கிறது. ஐரோப்பிய ஒன்றியம் ஐரோப்பிய ஆணையம், ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய ஒன்றிய அவை, ஐரோப்பிய அவை, ஐரோப்பிய நீதிமன்றம், ஐரோப்பிய மத்திய வங்கி ஆகிய அமைப்புக்களை உள்ளடக்கியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் குடிமக்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஐரோப்பிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்கின்றனர்.

1951 ஆம் ஆண்டில் ஆறு நாடுகள் சேர்ந்து உருவாக்கிய ஐரோப்பிய நிலக்கரி மற்றும் உருக்கு சமூகம், 1957 ஆம் ஆண்டின் ரோம் ஒப்பந்தம் ஆகியவையே ஐரோப்பிய ஒன்றியத்தின் தோற்றத்தின் மூலமாகக் கருதப்படுகிறது. அக்காலத்தில் இருந்து, ஒன்றியம் புதிய உறுப்பு நாடுகளை உள்ளடக்கி விரிவடைந்தது.

2012ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு ஐரோப்பிய ஒன்றிய அமைப்பிற்கு வழங்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2013 ஜூலை 1 ஆம் திகதி குரோவாசியா நாடு ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடாக சேர்க்கப்பட்டது

# சபாநாயகர் கருவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்



(கொழும்பு)

**சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களினால் இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது.**

சபாநாயகர், நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது வேண்டுமென்றே கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்களுக்கு அநீதி இழைத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதனடிப்படையில் சபாநாயகர் கரு ஜயசூரியவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர கூட்டு எதிர்க்கட்சியினர் திட்டமிட்டுள்ளதாக கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர், வார இறுதி கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். அவர்மேலும்தெரிவிக்கையில்,

அண்மையில் நாடாளுமன்றில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போதும், கூட்டு எதிர்க்கட்சியினர் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளிக்கப்படவில்லை.

மாறாக கூட்டு எதிர்க்கட்சியின் கடும் எதிர்ப்பிற்கு மத்தியில் சரத் பொன்சேகாவிற்கு உரையாற்ற சந்தர்ப்பம் அளித்து அது மோதலாக வெடிக்க சபாநாயகர் வழியமைத்தார்.

இதன் அடிப்படையில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நம்பிக்கையில்லா தீர்மானத்திற்காக கையொப்பங்கள் திரட்டப்பட்டு வருவதாக கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர் தெரிவித்துள்ளார். (இ-5)

# இத்தாலி நாட்டில் பணிபுரிந்த பத்து இலங்கையர்கள் கைது


(கொழும்பு)

இத்தாலியில் பணிபுரிந்த 10 இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். உரிய ஆவணங்கள் இன்றி தொழில் புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இத்தாலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாலி மொன்சா பகுதியிலுள்ள வர்த்தக நிலையத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போதே மேற்படி 10 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 10 பேரில் இரு பெண்களும் உள்ளனர். இவர்கள் இருவருக்கும் வதிவிட அனுமதிப்பத்திரம் இன்மை காரணமாக கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-5)

# மகிந்தவுக்கு ஆதரவாக களமிறங்கும் சமித தேரர்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த இராணுவத்தினரை நீக்கியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபடப் போவதாக, தென் மாகாண சபை உறுப்பினர் பத்தேகம சமித தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15ஆம் திகதி காலி - தர்மபால பூங்காவில் அவர் இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

# வீரவன்சவுக்கு எதிராக வழக்கு

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவுக்கு எதிராக குற்றவியல் மற்றும் குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தை மீறி போலி கடவுச்சீட்டை தன்வசம் வைத்திருந்தமை, அந்த போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயற்சித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த வழக்கு தொடரப்படவுள்ளது.

இதனடிப்படையில், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் அடுத்த சில தினங்களில் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

மகிந்த ராஜபக்ஷ அணியில் முன்னணி செயற்பட்டாளரான விமல் வீரவன்ச, போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி வெளிநாடு செல்ல முயற்சித்த போது குடிவரவு குடியல்வு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

இவரை விடுதலை செய்வதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டதாக நாடாளுமன்றத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# 22 வருடங்களின் பின்னர் பெண் பொலிஸ் அதிகாரிகளுக்கு உயர் பதவிகள் வழங்கல்

(கொழும்பு)

இலங்கையின் பொலிஸ் துறையில் 22 வருடங்களுக்கு பின்னர் இரண்டு பெண்கள் பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் அரச புலனாய்வுப்பிரிவில் பணியாற்றும் திலினா ஜெயவர்த்த மற்றும் ஒருவர் பொலிஸ் நலன்புரி பிரிவில் பணியாற்றும் சோமாவதி குமாரஶ்ரீ ஆகியோராவர்.

இந்த பதவி உயர்வுகள் மே 5ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

1994ஆம் ஆண்டு பிரமிளா திவாகர என்ற பெண் அதிகாரி இளைப்பாறிய பின்னர் எந்த பெண் அதிகாரியும் இதுவரை பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்த்தப்படவில்லை. (இ-5)

# இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி மீன்பிடித்த 153 இந்திய மீனவர்கள் கைது

(கொழும்பு)

2016ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் 153 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுடைய 27மீன்பிடி வள்ளங்களும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையான காலப்பகுதியில் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டின் பேரில் 153 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்களுடைய 27மீன்பிடி வள்ளங்களும் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. அவர்களில் 119 மீனவர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய 34 மீனவர்கள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். எனினும் அவர்கள் பயன்படுத்திய மீன்பிடி வள்ளங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மேலும் இதுவரையில் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்தமைக்காக 115 மீன்பிடி வள்ளங்கள் இலங்கை கடற்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஐந்து ஆண்டுகளில் மாத்திரம் இந்திய கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 1,205 இலங்கை மீனவர்கள் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### மனித சுபாவங்கள்

அவனுக்கு எவ்வளவோ உதவினேன். ஆனால் கொஞ்சம் கூட நன்றி விசுவாசம் இல்லை!

பணம், புகழ் வந்ததும் ஆள் மாறி விட்டான்; நம்மை ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன் என்கிறான்.

காரியம் ஆனதும் நம்மைக் கைகழுவி விட்டான்.

வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது போல்..

தீட்டிய மரத்தையே பதம் பார்ப்பது போல்..

என்றெல்லாம் தங்களிடம் மனிதாபிமானமற்ற முறையில் பலர் நடந்து கொண்டதாகச் சிலர் புலம்பிக் கொண்டே இருப்பார்கள். அடிக்கடி இவற்றை நினைத்து இருக்கின்ற கொஞ்ச மன அமைதியையும் இவர்கள் கெடுத்துக் கொள்வார்கள். இவையெல்லாம் தேவையற்ற வீண் நினைப்புகள்.

மனிதன் பல்வேறு மிருகங்களின் குணங்களைக் கொண்டவன். பொறாமையும் கோபமும் சுயநலமும் நிரம்பப் பெற்றவன். சட்டத்திற்காகவும் சமூகத்திற்காகவும் கடவுளுக்காகவும் தன் சுய உருவத்தை வெளிக்காட்டாத அவன் அன்பிற்கு அடிமைப்பட்டும் பாசத்திற்குப் பணிந்தும் நடக்கிறான்.ஆனாலும் அவன் அவசியம் ஏற்படும் சூழ்நிலைகளில் தன் மிருக சொரூபத்தை காட்டத்தவறுவதில்லை.

இத்தகைய அரக்க குணங்களையும் கொடுமையான உணர்வுகளையும் இனிய சிரிப்பாலும் கனிவான மொழிகளாலும் போலியான நடவடிக்கையாலும் மறைத்து வைக்கிறான் மனிதன்.

நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் அது உணவைத் தேடிக் குப்பைத் தொட்டிக்குத்தான் போகும். அதே போலத்தான் மனிதனும் எவ்வளவு செய்தாலும் தன்னை ஒரு நாள் நிறங்காட்டத் தவறமாட்டான்.

ஆனால் வெளித் தோற்றத்தையே உண்மையான தோற்றமாக எண்ணிக் காரியங்களில் ஈடுபடுகிறவர்களே பின்னர் வருத்தப்பட நேரிடுகிறது.

ஆனால் எந்த நிமிடமும் அவன் நமக்கெதிராகத் திரும்புவான். அது மனித சுபாவம் என்று எண்ணத் தொடங்கும். பக்குவம் உள்ளவர்களுக்கும் மனிதனின் சுபாவங்களை நன்கு உணர்ந்தவர்களுக்கும் அவனது எதிர் நடவடிக்கைகள் அல்லது விரும்பத்தகாத நடவடிக்கைகள் அதிர்ச்சியையோ வேதனையையோ தருவதில்லை.

இந்த உண்மைகளை உணராமல், தெய்வம் போலவும் தேவதையைப் போலவும், அபூர்வப் பிறவி போலவும், மனிதருள் மாணிக்கம் போலவும், புடம் போட்ட தங்கம் போலவும், சுட்ட சங்கு போலவும் மற்றவர்கள் நம்மிடம் நடந்து கொள்வார்கள் என்று யாரேனும் எதிர்பார்த்தால் அவர்கள் பரிதாபத்திற்கு உரியவர்கள்.

லேனா தமிழ்வாணன்















மறைந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் ஸ்ரீசபாரத்தினம் மற்றும் அவருடன் பலியான நூற்றுக்கு மேற்பட்ட ரெலோ இயக்கப் போராளிகளின் 30 ஆம் ஆண்டு நினைவஞ்சலி பொதுக்கூட்டம் நேற்றைய தினம் நல்லூர் சட்டநாதர் கோவில் அருகாமையில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் ஏற்பாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்புப் பேச்சாளராக பிரபல இந்திய பத்திரிகையாளர் பகவான்சிங் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியதுடன், தமிழ் தேசிய முற்போக்கு கூட்டமைப்பின் தலைவர் அமைச்சர் மனோ கணேசன், நவசமசமாஜக் கட்சித்தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண, ஐக்கிய சோசலிச கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜெயசூரிய,வடமாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் வடகிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப்பெருமாள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பிரான்ஸ் கிளை அமைப்பாளர் நித்தியானந்தம், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் சிறிகாந்தா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். இந்த நிகழ்வில் வடமாகாண சபை அமைச்சர்கள்,வடமாகாணசபை உறுப்பினர்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (படங்கள்-பொ.சோபிகா)







சண்முகம் சங்கீதனின் தாய் மொழியில் பேச நினைத்ததெல்லாம் நூல் வெளியீடு நேற்றைய தினம் காலை 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி பிரதான கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வு கல்வியியற் கல்லூரி பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகனும், வாழ்த்துரையை உப பீடாதிபதி எஸ்.ஆர் சத்தியேந்திரம்பிள்ளையும், வெளியீட்டுரையை உப பீடாதிபதி பா.தனபாலனும் நிகழ்த்தினர். இதன் போது நூலின் சிறப்பு பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பெற்றுக்கொண்டதுடன் நூலினை கல்லூரி பீடாதிபதி நூலாசிரியர் சண்முகம் சங்கீதன் உள்ளிட்டோருடன் இணைந்து வெளியீட்டு வைத்தார். மேலும் சிறப்பு பிரதியை வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தனும் பெற்றுக்கொண்டார். (படங்கள்- உ.சாளின்)

உடுப்பிட்டி இமையாணன் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று காலை 9 மணியளவில் நடைபெற்றது. த.பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தார். இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், எஸ்.அகிலதாஸ், க.தர்மலிங்கம் ஆகியோருடன் கர வெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.சுரேஸ்குமார், கிராமசேவையாளர் த.சுதர்சன் மற்றும் முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படங்கள்–கரணவாய் செய்தியாளர்)









யாழ்ப்பாணம் இந்து புத்த கலாசார சங்கம் நடத்திய தேசிய இரண்டாவது மொழி நிலையத்தில் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றபோது...

# சீனாவுடனான உறவு சீராகவே உள்ளது

## இலங்கை அறிவிப்பு

(கொழும்பு)

**சீனாவுடனான பாதுகாப்பு உறவு சீராகவே இருப்பதாக இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி இதனை சீன ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.**

இந்த நிலையில் இரண்டு நாட்டு படையினருக்கும் இடையில் பயிற்சிகள் தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் ரணிலின் சீன விஜயத்தின் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையிலும் இரண்டு நாட்டு உறவு குறித்து நம்பிக்கை வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## நாடாளுமன்றை நகைச்சுவையாக எடுத்துக்கொள்ளக் கூடாது-காமினி

நாடாளுமன்றை நகைச்சுவையாக எடுத்துக்கொள்ளக கூடாது என அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றில் இதற்கு முன்னரும் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நான் இதற்கு முன்னரும் தலையீடு செய்திருக்கின்றேன்.

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிடுவதில் நகைப்பிற்குரியது.

இதற்கு முன்னரும் சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் பாதுகாப்பு தொடர்பிலும் பிரச்சினைகள் எழுந்த போதிலும் இவ்வாறான குழப்பங்கள் விளைவிக்கப்படவில்லை.

குழப்பங்களை விளைவிப்பதன் மூலம் இவ்வாறான பிரச்சினைகளுக்கு எந்த வகையிலும் தீர்வு காண முடியாது எனவும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (இ-5)

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரமே ஷசி வீரவன்சவிடம் இல்லை

(கொழும்பு)



முன்னாள் அமைச்சர் விமல வீரவன்சவின் மனைவி ஷசி வீரவன்ச, புதிய தேசிய ஆள் அடையாள அட்டையை பெற்றிருப்பது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்காமலேயே என தெரியவந்துள்ளது.

பாராளுமன்றத்திலுள்ள அடிப்படை விடயங்களை பரிசீலனை செய்யும் குழுவில் இந்த உண்மை தெரியவந்துள்ளது. முன்னாள் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் ஜகத் பீ. விஜேவீர இந்த குழுவில் அழைக்கப்பட்டு பரிசீலனை செய்யும் போதே இந்த தகவல் வெளியாகியுள்ளது.

விமல் வீரவன்ச அமைச்சராக இருக்கும் காலகட்டத்தில் வீடு மாறும்போது ஷசி வீரவன்சவின் ஆள் அடையாள அட்டை தொலைந்துள்ளதாக காரணம் காட்டியுள்ளார். பின்னர், சாரதி அனுமதிப்பத்திரத்தைவைத்து அவருக்கு ஆள் அடையாள அட்டை வழங்க நேரிட்டதாக முன்னாள் ஆணையாளர் ஜகத் பீ. விஜேவீர பாராளுமன்ற பரிசீலனைக் குழுவின் முன்னால் ஏற்றுக் கொண்டுள்ளார்.


இவ்வாறு ஷசி வீரவன்ச போலியான பத்திரங்களைக் காட்டி கடவுச் சீட்டு, ஆள் அடையாள அட்டை போன்ற தனது அடையாளத்தை உறுதி செய்யும் முக்கிய அடையாள அட்டைகளை தயாரித்துள்ளதாக பல முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

இதேபோன்று, விமல் வீரவன்சவுக்கும் போலியான தகவல்களை முன்வைத்து பெறப்பட்ட கடவுச் சீட்டுக்கள் பலவும் ஆள் அடையாள அட்டையும் இருப்பதாக தற்பொழுது வழக்கு தொடரப்படவும் உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் செய்திப் பிரிவு அறிவித்துள்ளது. (இ-5)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 715

Search for people, places and things Nagendram Home

**றோகன்**




**லொலிப்பப் விதுஷ்**




**தர்சினி**




**அச்சு**




**நிசாந்தன்**




**புகழ்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

154

## எம்.ஜி.ஆர். படத்திற்கு வசனம் எழுதினார், கே.பாலசந்தர்

...நூறு படங்களுக்கு மேல் டைரக்ட் செய்துள்ள கே.பாலசந்தர், எம்.ஜி.ஆர்.நடித்த படம் எதையும் டைரக்ட் செய்ததில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஆனால் எம்.ஜி.ஆர். நடித்த தெய்வத்தாய் என்ற படத்தின் மூலம்தான் அவர் வசன கர்த் தாவாக திரை உலகில் அடி யெடுத்து வைத்தார் என்பது பலருக்கு வியப்பளிக்கும் செய்தியாக இருக்கும்.

**ஒரே ஆண்டில் 9 படங்கள்!**

எம்.ஜி.ஆர். 1963 இல் பணத்தோட்டம், கொடுத்து வைத்தவள், தர்மம் தலை காக்கும், கலை அரசி, பெரிய இடத்துப்பெண், ஆனந்தஜோதி, நீதிக்குப் பின் பாசம், காஞ்சித் தலைவன், பரிசு ஆகிய 9 படங்களில் நடித்தார்.

பணத்தோட்டம், ஜி.என். வேலுமணியின் சரவணா பிலிம்ஸ் தயாரித்த படமாகும். கே.சங்கர் டைரக்ட் செய்தார். கதாநாயகியாக சரோஜாதேவி நடித்தார்.

பி.எஸ்.ராமையா கதைக்கு வசனம் எழுதியவர் பாசுமணி. இசை: விசுவநாதன்-ராமமூர்த்தி.

வெற்றிகரமாக ஓடிய படம் இது.

பரிசு படத்தில் எம்.ஜி.ஆரும் சாவித்திரியும் இணைந்து நடித்தனர். இசை: கே.வி. மகாதேவன். வசனம்: ஆரூர்தாஸ்.இந்தப்படத்தை தயாரித்து இயக்கியவர்: யோகானந்த்.

தர்மம் தலை காக்கும், நீதிக்குப்பின் பாசம் ஆகியவை தேவர் பிலிம்ஸ் தயாரிப்பு.

இரண்டிலும் எம்.ஜி.ஆருடன் சரோஜாதேவி இணைந்து நடித்தார். இந்தப் படங்களை இயக்கியவர் எம்.ஏ.திருமுகம்.

டி.ஆர்.ராமண்ணாவின் பெரிய இடத்துப்பெண், பெரிய வெற்றிப்படம். இதில் எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்தவர் சரோஜாதேவி.

**காஞ்சித் தலைவன்**

மேகலா பிக்சர்ஸ் தயாரித்த காஞ்சித் தலைவன் படத்தில் மீண்டும் எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் இணைந்தனர்.

காஞ்சியைத் தலை நகராகக் கொண்டு அரசாண்ட நரசிம்மவர்மர் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்ட கதை. வசனங்களைக் கருணாநிதி எழுதினார். எம்.ஜி. ஆருடன் பாணுமதி நடித்தார். மற்றும் எஸ்.எஸ்.ராஜேந்திரனும் விஜய குமாரியும் இடம் பெற்றிருந்தனர்.

வசனம், நடிப்பு, காட்சி ஜோடனை எல்லாமே சிறப்பாக இருந்தன. இதை டைரக்ட் செய்தவர் காசிலிங்கம்.




இப்படம் 26.10.1963 இல் வெளிவந்தது.

சரோடி பிரதர்ஸ் தயாரிப்பான கலை அரசியில் எம்.ஜி.ஆருடன் பானுமதி நடித்தார். ஏ.காசிலிங்கம் டைரக்ட் செய்தார். வசனம்: ரவீந்தர்.

பறக்கும் தட்டு காட்சிகள் இடம் பெற்ற படம் இது.

**ஆனந்தஜோதி**

பி.எஸ்.வீரப்பாவின் ஹரிஹரன் பிக்கர்ஸ் தயாரித்த ஆனந்த ஜோதியில் எம்.ஜி. ஆரின் ஜோடியாக தேவிகா நடித்தார். இவர்கள் இருவரும் இணைந்து நடித்த ஒரே படம் இதுதான்.

கமலஹாசனும் குழந்தை நட்சத்திரமாக நடித்தார்.

வசனத்தை ஜாவர் சீதாராமன் எழுத,வி.என். ரெட்டியும், ஏ.எஸ்.ஏ.சாமியும் டைரக்ட் செய்தனர்.


**கே.பாலசந்தர் அறிமுகம்**

1964 இல் வேட்டைக்காரன், என்கடமை, பணக்கார குடும்பம், தெய்வத்தாய், தொழிலாளி, படகோட்டி , தாயின் மடியில் ஆகிய 7 படங்களிலும் எம்.ஜி.ஆர் நடித்தார். இதில் தெய்வத்தாய் ஆர்.எம்.வீரப்பனின் சத்தியா மூவிஸ் தயாரிப்பு.

இந்தப்படம் தயாரிக்கப்பட்ட காலகட்டத்தில் கே.பாலசந்தர் அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தில் அதிகாரியாக வேலை பார்த்து வந்தார். நாடகம் எழுதி, இயக்குவதில் புகழ் பெற்று விளங்கினார். அவர் எழுதிய மெழுகுவர்த்தி, மேஜர் சந்திரகாந்த் ஆகிய நாடகங்கள் ரசிகர்களிடம் மிகுந்த ஆதரவைப் பெற்றிருந்தன.

(தொடரும்)

# கோத்தாவின் திடீர் அமெரிக்க பயணத்தின் இரகசியம்



(7 ஆம் திகதி வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

...தனக்கு ஆதரவாகச் செயற்படும் சரத் பொன்சேகா மற்றும் ஏனைய தலைவர்களை ஆத்திரமூட்டும் வகையில் மகிந்த மற்றும் அவரது அரசாங்கத்தால் கேணல் ராம் உட்பட மூன்று புலிகள் அமைப்புத் தலைவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என 2010 ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தில் அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சுட்டிக் காட்டியிருந்தார்.

'கே.பி என அறியப்படும் குமரன் பத்மநாதன் மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு.இடையில் மேற்கொள்ளப்பட்ட இரகசிய உடன் படிக்கையை அடுத்து தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிகளின் மூன்று முக்கிய தலைவர்களை இலங்கை அரசாங்கம் தற்போது விடுவித்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். விடுவிக்கப்பட்டவர்களில் கேணல் ராமும் ஒருவராவார்.

ஜெனரல் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் முக்கிய உறுப்பினர்களுக்கு ஊறு விளைவிக்கும் நோக்குடனேயே இலங்கை அரசாங்கமானது புலிகள் அமைப்பின் தலைவர்களைத் தற்போது விடுவித்துள்ளது என ரணில் குற்றம் சுமத்தினார்.

செல்லக்கிரி, கிரிதரன் ஆகிய இரண்டு புலி உறுப்பினர்களும் விடுவிக்கப்பட்டுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க சண்டே ஐலண்ட் ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிடப்பட்டுள்ளார். கடற்படை அதிகாரி ஒருவரைக் கொலை செய்தார் என்கின்ற குற்றச்சாட்டில் செல்லக் கிரியும் டயற்ற கிருள்ள கண்காட்சியின் போது இலங்கை ஜனாதிபதி கொலை செய்ய முயற்சித்தார் என்கின்ற குற்றச்சாட்டின் பேரின் கிரிதரனும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வன்னியில் இடம் பெயர்ந்த சாதாரண தமிழ் ம்க்களை அவர்களது இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்காத அரசாங்கம் தற்போது தன்னைக் கொலை செய்ய வந்தவர்கள் என்பதற்கான ஆதாரங்கள் உள்ளபோதிலும் இவ்வாறான புலிஉறுப்பினர்களை விடுவித்து வருகிறது.

இது கே.பி மற்றும் இலங்கை ஜனாதிப்தி ஆகிய இருவருக்கும் இடையிலான இரகசிய உட்ன்படிக்கையின் ஒரு பகுதியாகும் என நாங்கள் நம்புகிறோம்' என ரணில் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ரணிலால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பை இராணுவப் பேச்சாளர் மறுத்ததுடன், கேணல் ராம் ஒரு போதும் தடுத்து வைக்கப்படவில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

இந்தச் செய்தியுடன் தொடர்புபட்ட செய்தி ஒன்று 16.01.2010 அன்று வெளியிடப்பட்ட டெய்லி மிறர் பத்திரிகையில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

'புலிகள் அமைப்பின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கேணல் ராம் ஒரு போதும் தடுத்து வைக்கப்படவில்லை எனவும் ஜெனரல் சரத் பொன்சேகா தரப்பால் கூறப்பட்டது போன்று ராம் ஒருபோதும் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்படவில்லை எனவும் இராணுவத் தரப்பு கூறுகிறது. கேணல் ராம் இராணுவத்தால் தடுத்து வைக்கப்பட்டே விடுவிக்கப்பட்டார் என ஜெனரல் சரத் பொன்சேகாவின் அலுவலகம் உறுதிப் படுத்துகிறது.

கேணல் ராம் முன்னாள் புலி உறுப்பி னர்களை ஒன்றிணைத்து தேர்தல் நடவடிக்கைகளை மட்டுமல்லாது, பொதுமக்களின் உடைமைகள் மற்றும் அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழப்பதற்கான நடவடிக்கைகளுக்கும் தலைமை தாங்குவதற்கான வாய்ப்புக் காணப்படுவதாக பொன்சேகாவின் அலுவலகம் தெரிவித்தது.

ஆகவே தொடர்புபட்ட அதிகாரிகள் இது தொடர்பில் அவசியமான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், கேணல் ராம் ஒருபோதும் கைது செய்யப்படவில்லை எனவும் இவர் கிழக்கில் மறைந்து வாழ்வதாகவும் நம்பப்படுகிறது என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, டெய்லி மிறர் இணையத்தளத்திற்கு வழங்கிய செய்திக் குறிப்பில் தெரிவித்திருந்தார்."

எனினும், ராம் இராணுவத்தின் தடுப்பில் வைக்கப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார் எனத் தற்போது கூறப்படுகிறது. ராஜபக்ஷவின் புலனாய்வு அதிகாரிகளுடன் இணைந்து புலிகள் அமைப்பின் முக்கிய இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்கள் பணியாற் றுவதாக அண்மையில் இடம் பெற்ற முஸ்லீம் ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பொன்றில் ரணில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து கேணல் ராம் பணியாற்றுகிறார் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வாறான பின்னணியில், கோத்தபாயவின் அமெரிக்காவிற்கான திடீர் பயணமானது தற்போதும் ஒரு புதிராகவே உள்ளது.

(முற்றும்)

# மாயவலை

ஒரு மிஸ்ட் கோல் கொடுங்க, உங்கள் வாழ்க்கையையே நாங்கள் மாற்றிக் காட்டுகிறோம்" என்கிற பல விளம்பரங்கள், தொலைபேசி அழைப்புகள் உங்களுக்கு வந்திருக்கும். இது போன்ற அழைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேசி சூடுபட்ட அனுபவமும் சிலருக்கு ஏற்பட்டிருக்கலாம்.

முதலில் உங்களது ஆசைகளைத் தூண்டும் இந்த அழைப்பாளிகள் பிறகு மெல்ல உங்களது பணப்பைக்கு பங்கம் வைக்கும் தூண்டிலை போடுவார்கள். சுதாரித்தவர்கள் பணத்தை இழக்காமல் தப்பிப்பார்கள். கொஞ்சம் முயற்சித்து பார்ப்போமே என்பவர்கள் முதலை வாயில் சிக்கியவர்கள்தான். பணத்தை இழந்துவிட்டு கடைசியில் யாரிடம் போய் சொல்வது என்பது தெரியாமல் புலம்பிக் கொண்டிருப்பார்கள்.

இப்படி சமீப காலமாக சில நூதன வழிகளில் மாயவலைகள் வீசப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் சிக்கி விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது நமது பொறுப்புதான்.

சமீபத்தில் சில நண்பர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு நடையாய் நடந் தார்கள். ஒரு நிறுவனத்தின் மீது பண மோசடி நடவடிக்கை எடுக்க வேண்டும் கூறினார்கள். என்ன ஏதென்று விசாரித்த போது அவர்கள் ஏமாற்றப்பட்டத்தின் முதல் தொடக்கப் புள்ளி ஒரு தொலைபேசி அழைப்பு என்று கூறினர்.

சேர் உங்க தொலைபேசி எண்ணுக்கு பரிசு விழுந்திருக்கிறது. உங்க மனைவியும் நீங்களும் வந்து அதை வாங்கிக்கொள்ளுங்கள் என்று ஒரு அழைத்திருக்கிறார்கள். மேற்கொண்டு விசாரிக்க சின்ன மீட்டிங் இருக்கும் , மீட்டிங்கில கலந்து கொள்ளனும் அது முடிச்சதும் உங்களுக்கு பரிசு கொடுப்பாங்க என்று பேசியிருக்கின்றனர். ஏதோ ஒரு பரிசு குலுக்கல்தானே என்று சென்றால், அதுபோல 50-க்கும் மேற்பட்டவர்கள் அங்கு வந்துள்ளனர். எல்லோருமே தங்களுக்கு பரிசு விழுந்துள்ளது என்கிற ஆசையில் வந்தவர்கள்.

அதுபோதுமே.. கூட்டம் நடக்கிறது. எங்களிடம் ஆயுள் காப்பீடு திட்டம் எடுத்தால் அதே தொகைக்கு அந்த இன்ஷூரன்ஸ் நிறுவனத்திலேயே கடன் வாங்கிக் கொள்ளலாம் என்கிறார்கள். கூட்டத்துக்கு வந்திருந்த அனைவருமே ஏதாவது ஒரு வகையில் சுயதொழில் செய்பவர்கள், சிறிய பலசரக்குக் கடை, ஆட்டோ ஓட்டுபவர்கள், அரசு ஊழியர் என நடுத்தர மக்களிலும் சற்று கீழ் நிலையில் இருப்பவர்கள். எதாவது செய்து ஓரளவுக்கு முன்னேற வேண்டும் என்கிற வேட்கையும் துடிப்பும் கொண்டவர்கள்.

கூட்டத்தில் மூளைச் சலவை செய்யப்பட்டாலும் பரிசும் வேண்டாம், இன்ஷூரன்சும் வேண்டாம் என மறுத்தவர்கள் பாதிப்பேர் என்றால், இன்ஷூரன்ஸ் ஒரு பிரீமியம் கட்டினால் கடனுதவி கிடைக்கும் அதை வைத்து தொழிலை இன்னும் சிறப்பாக செய்யலாம் என் யோசித்தவர்கள் பாதிப்பேர்.

இவர்கள் ஒவ்வொருவரிடமும் தனியாக பேசி அவர்களது தேவைகளை அறிந்தபின், இதுக்கு ஆபரும் இருக்கு இன்னைக்கே உடனடியாக வீட்டில் தங்க நகை இருந்தா அடகு வைத்து கட்டுங்க, அடுத்த வாரத்துல கடன் வாங்கியதும் திருப்பிட போறீங்க, அப்பறம் தொழிலை முன்னேற்றம்செய்யலாம் என மூளைச் சலைவை செய்ததில் பத்து பேர் மசிந்துள்ளனர். பணத்தை வாங்கி ஒரு இன்ஷூரன்ஸ் நிறுவனத்தில் முறையாக கட்டிவிட்டு சில நாட்களில் பத்திரத்தையும் அளித்துள்ளனர். கடன் எப்போ வாங்கலாம் எனக் கேட்டால் வேறு ஒரு கடன் வழங்கும் நிறுவனத்துக்கு கை காட்டியிருக்கிறார்கள்.



அந்த நிறுவனமோ இன்ஷூரன்ஸ் பத்திரத்துக்கு எல்லாம் கடன் கிடைக் காது என விரட்டாத குறையாக அனுப்பியுள்ளனர். விசாரித்த பிறகுதான் தெரிந்தது பணத்தை வசூலித்த நிறுவனம் இன்ஷூரன்ஸ் சப் ஏஜெண்ட் வேலைகளை பார்க்கிறது. ஆவணங்கள் சட்ட ரீதியாக சரியாக இருக்க, வாய்மொழி உத்தரவாதங்களுக்கு வைத்து புகார் கொடுக்க முடியாமல் இப்போது அலைந்து கொண்டிருக்கின்றனர்.

இப்படி வாய்மொழி உத்தரவாதங்களை நம்பி ஏமாறுவது ஒருபக்கம் என்றால் இப்போது சுற்றுலா விரும்பிகளை மையமாக வைத்து இத்தகைய மோசடிகள் நடந்து வருகின்றன. இந்த மாயவலையும் செல்போன் மூலம்தான் விரிக்கப்படுகிறது.

25 ஆண்டுகளுக்கு, ஆண்டுக்கு பத்து நாட்கள் சொகுசான சுற்றுலா விடுதி களில் தங்கலாம். இதற்கு ஒருமுறை மட்டும் பணம் கட்டினால் போதும் என அன்பு அழைப்புகள் வருகிறது. ஒரு விசாரணைக்காக திரும்ப அந்த எண்ணுக்கு அழைத்தால் அவர்கள் சொல்லும் கணக்குகள் நம்மை அழகாக வலையில் சிக்க வைக்கிறது. இலங்கை முழுவதும் உள்ள அவர்களது கிளைப்புகளில் இலவசமாக தங்கிக் கொள்ளலாம். உறவினர்களை அழைத்துச்சென்றால் சலுகை, நீங்கள் தங்கிக் கொள்ளாத நாட்களை நண்பர்களுக்கு கிட்டாகக் கொடுக்கலாம் என ஆசைகளை தூண்டுவதாகத்தான் இருக்கிறது. ஆனால் இதற்கு பின்னால் மறைமுகக் கட்டணங்கள் என ஒவ்வொரு முறையும பல வகைகளில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன என்கிறார்கள்.

தவிர நாம் புக்கிங் செய்ய விரும்பும் நாட்களில் அறைகள் காலி இல்லை என்பதும், பண்டிகை நாட்களில் இந்த உறுப்பினர்கள் பயன்படுத்த முடியாது என்பதும் இந்த கார்ப்பரேட் கிளப்புகள் குறித்து ஏற்கெனவே புகார்களும் குவிந்து வருகின்றன.

ரூபாய் 1 லட்சத்தில் உறுப்பினராகலாம் என்று அழைக்கும் இந்த விளம்பரங்கள் ஆயுள் கால உறுப்பினர், 25 ஆண்டுக்கால உறுப்பினர் என ரூ.3 இலட்சம் ரூ.4 இலட்சம் என்று நிற்கிறது. நாம் தனி யாக சென்றாலே இவர்களுக்கு கொடுக்கும் கட்டணத்தைவிட குறைவாக செலவு செய்யலாம். தவிர நமது தேவைக்கு ஏற்ப வும் திட்டமிட முடியும். இதில் பணம் கட்டி ஏமாந்தவர்களும் இருக்கின்றனர்.

உங்கள் கடன் சுமைகளை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம் என்று இன்னொரு தொலைபேசி அழைப்பு, கூடவே குறுஞ் செய்திகள் தினசரி வருகின்றன். அடமானம் வைத்த தங்க நகைகளை திருப்புவதில் சிக்கலா நாங்கள் இருக்கிறோம்" என்று அழைக்கிறார்கள். இந்த மறு கடன் புரோக்கர்கள் முன்பிருந்தே இருந்து வருகிறார்கள் என்றாலும் இப் போது தொலைபேசியிலும் குறுஞ்செய்தி வழியாகவும் வரத் தொடங்கிவிட்டனர். இதுவும் ஒரு மாயவலை என்பதை பலரும் புரிந்து கொள்ளவில்லை.

நமது தங்க நகைகள் அடமானம் இருப்பது குறித்து அவர்களுக்கு என்ன கவலை இருக்க முடியும். அடமானம் இருக்கும் தங்க நகைகள் ஏற்கெனவே ஒரு குறிப்பிட்ட சதவீத வட்டியில் இருக்கிறது என்றால், இவர்களிடம் அதிக வட்டிக்கு வாங்கி திருப்ப வேண்டியிருக்கும். தங்க நகைகளை திருப்பினாலும் சில மாதங்களில் இவர்களது நெருக்கடியும் ஆரம்பமாகிவிடும். சில வேளைகளில் இவர்கள் வழங்கும் கடன்களுக்கு ஈடாக தங்க நகைகளை இழக்க வேண்டியிருக்கலாம்.

எல்லா விளம்பரங்களையும் அப்ப டியே நம்பும் அப்பாவிகள்தான் இவர் களின் இலக்கு. அப்பாவிகளாக இருக்கிறோமா அல்லது சாமார்த்தியமாக இருக்கிறோமா என்பதை நமது ஆசைகள் தீர்மானிக்க வேண்டாம். இந்த மாய வலைகளைக் கண்டறிய எந்த மந்திரமும் தேவையில்லை. கொஞ்சம் நிதானமாக முடிவெடுப்பதே நிம்மதிக்கு வழி வகுக்கும்.

# ஊழியர்களை கொண்டாடும் மாருதி

"பொதுவாக ஊழியர்களிடம் நேரத்துக்கு வந்து அளித்த வேலையை ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கும் நிறுவனங்கள்தான் அதிகம். அதிகபட்சம் மின்சாரத்தை சிக்கனமாக செலவிடுவதன மூலம் நிர்வாகச் செலவுகளை மிச்சப்படுத்தும் நிறுவனங்களே ஏராளம்.

ஆனால் ஊழியர்களிடமிருந்து ஆலோசனை பெற்று அதைச் செயல்படுத்தியதன் மூலம் கடந்த ஆண்டில் ரூ. 281 கோடியை மிச்சப் படுத்தியுள்ளது மாருதி சுசுகி.

இந்தியாவில் அதிக கார்களை உற்பத்தி செய்வதில் முதலிடத்தில் உள்ள மாருதி சுசுகி நிறுவனம் ஆலோசனை பெறும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன்படி இந்நிறுவனத்தின் அனைத்து ஆலைகளிலும் உள்ள ஊழியர்கள் செலவைக் குறைப்பதற்கான ஆலோசனைகளை வழங்கலாம்.

கடந்த ஆண்டு இந்நிறுவன ஊழியர்களிடமிருந்து வந்த ஆலோசனைகள் 6,98,640 ஆகும். அதாவது சராசரியாக ஓராண்டில் ஒரு ஊழியர் 38 ஆலோசனைகளை அளித்துள்ளார். இந்நிறுவனத்தின் ஊழியர் எண்ணிக்கை 15 ஆயிரமாகும்.

ஊழியர்களின் ஆலோசனையை செயல்படுத்தியதில் குறைந்த அளவில் மிச்சப்படுத்தியது கடந்த ஆண்டில்தானாம்.

கார் உதிரி பாகங்களில் ஒன்றான இன்ஸ்ட்ருமென்ட் பேனல்களில் தூசி படிவதைத் தடுக்க பிளாஸ்டிக் காகிதம் சுற்றப்படும். இதற்குப் பதிலாக நிரந்தரமான மூடியைப் பயன்படுத்தலாம் என ஒரு ஊழியர் பரிந்துரைத்தார். இதை செயல்படுத்தியதன் மூலம் நிறுவனத்துக்கு மீதமான தொகை ரூ. 26,59,642 ஆகும். அத்துடன் இயந்திர தூள்களை (ஸ்கிராப்) எடுத்துச் செல்வதும் குறைந்தது. இதனால் நிறுவனத்துக்கு மீதமான தொகை ரூ. 1,06,400 ஆகும்.

ஊழியர்கள் நிறுவனத்துக்கு ஆலோசனைகளை அளித்து அதைச் செயல்படுத்தும்போது அவர்களுக்கு மிகுந்த பெருமிதம் ஏற்படுகிறது.



ஊழியர்களின் ஆலோசனைகள் செயல்படுத்தப்படும்போது அதற்குப் பாராட்டோடு ஊக்கத் தொகையும் கிடைப்பதால் ஊழியர்கள் ஆர்வத்தோடு ஆலோசனைகளை அளிக்கின்றனர்.

பிற நிறுவனங்களும் இதை செயல்படுத்திப் பார்க்கலாமே.!

கார் விற்பனையில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வரும் மாருதி நிறுவன வெற்றியின் ரகசியம்-இதுதானோ!?

ஊழியர்களிடமிருந்து ஆலோசனை பெற்று அதைச் செயல்படுத்தியதன் மூலம் கடந்த ஆண்டில் ரூ. 281 கோடியை மிச்சப்படுத்தியுள்ளது மாருதி சுசுகி. ஊழியர்கள் நிறுவனத்துக்கு ஆலோசனைகளை அளித்து அதைச் செயல்படுத்தும்போது அவர்களுக்கு மிகுந்த பெருமிதம் ஏற்படுகிறது.




## ஏ/தி வீழ்ச்சியடைந்த போதும் வருவாய் அதிகரிப்பு

இந்நாட்டு ஏற்றுமதி கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 2.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேபோல், குறித்த காலப்பகுதியில் இறக்குமதி 5.5 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஜனவரி மாதத்தின் இந்நாட்டு இறக்குமதி, ஏற்றுமதி வர்த்தக இடைவெளியானது நூற்றுக்கு 9.1 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.

ஜனவரி மாதத்தின் வர்த்தக இடைவெளி 695 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட நிலையில், கடந்த வருடம் இது 765 மில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்டது.

ஏற்றுமதியில் சிறிய அளவில் வீழ்ச்சி காணப்பட்டாலும், ஜனவரியில் ஏற்றுமதி வருவாய் 13.3 வீதத்தால் உயர்வடைந் துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,516.26 | 6,592.45 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,435.55 | 3,471.37 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 3,058.474 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ)** சிஐரி(104.00), புளூ டைமன்ட்ஸ்(X)(0.40), கூஜே(51.20) எச்ஏவி பூட்(8.90), புளூ டைமன்ஸ்(1.50).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** ஈகுவிட்டி ரூ(59.90), சிலோன் பிறின்டர்ஸ்(144.80), செரண்டிப் ஹோட்டல்ஸ்(21.70), ஈபி கிரேஸி(1200.20), தன்கிரின்(60.10).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## உலக சந்தையில் எண்ணெய் விலை உயர்வு

கனடாவில் காட்டு தீ பரவியமையினால் எண்ணெயின் விலை உலக சந்தையில் உயர்வடைந்துள்ளது.

கச்சா எண்ணெய் பீபாயின் விலை 43 .37 டொலர் என பதிவாகியுள்ளமையுடன், அமெரிக்காவின் டப்ளியூ, டீ, ஐ எண்ணெய் பீபாயின் விலை 44.66 டொலர் என பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரத்தில் கச்சா எண்ணெய்யின் விலை 6 வீதத்தினால் உயர்வடைந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 143.59 | 147.40 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 207.30 | 214.64 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 162.76 | 169.25 |
| சுவிஸ் பிராங் | 147.34 | 153.47 |
| கனேடிய டொலர் | 110.81 | 115.42 |
| அவுஸ்திரேலிய டொலர் | 105.39 | 110.36 |
| சிங்கப்பூர் டொலர் | 105.17 | 109.19 |
| ஜப்பான் யென் | 1.33 | 1.38 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.18 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.67 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# இணக்கப்பாட்டுக்கு திரும்பும் மகிந்த அணி

மகிந்த ராஜபக்ஷ தரப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மைத்திரி தரப்பினருடன் இணக்கப்பாட்டு பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாக அரச ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் செய லாளர் மகிந்த அமரவீரவின் உறுதிப்படுத்தலையும் அது வெளி யிட்டுள்ளது.

இதன்போது இந்த சந்திப்புக்கள தனிப்பட்ட ரீதியிலேயே இடம் பெறுவதாகவும் உத்தியோகபூர்வ சந்திப்புக்கள் எவையும் இடம் பெறவிலலை என்றும் அமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த மேதினத்தின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சுமார் 40 உறுப்பினர்கள் மகிந்த ராஜபக்ஷவின் கிருலப்பனை கூட்டத்தில் பங்கேற்றனர்.

இந்த நிலையில் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளும்வகையிலேயே இந்த சந்திப்புக்கள் இடம் பெறுகின்றன என்று கூறப்படுகிறது.

இதேவேளை மேதினத்துக்கு பின்னர் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியின் அரசியல் செயற்பாடுகள் குறித்து ஆராயும் முகமாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச அழைத்த கூட்டம் ஒன்றை ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஸ்ரீரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் புறக்கணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் எப்போது நடைபெற்றது என்பது தெரியவரவிலலை.

எனினும் இறுதி 11 ஆவது மணித்தியாலத்தில் தாம் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் ஸ்ரீலங்கா சூதந்திரக்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்துவிட்டதாக மற்றுமொரு ஆங்கில செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)

# கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரியின் கைதில் தலையிடும் அரசியல்வாதி

ரக்பி வீரர் வஸிம் தாஜுதீனின் கொலையுடன் தொடர்புடைய முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அதிபரை, அரசாங்கத்தின் உயர் அரசியல்வாதி ஒருவர் பாதுகாப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

குறித்த அரசியல்வாதி, குற்றப் புலனாய்வு துறையினரிடம் பேசி குறித்த முன்னாள் பொலிஸ் அதிகாரியின் கைதை தற்காலிகமாக நிறுத்துமாறு கோரியிருக்கிறார்.



இதற்காக அவர் குறித்த முன்னாள் பொலிஸ் அதிகாரிக்கும் குற்றப்புலனாய்வுத் துறையினருக்கும் இடையில் சந்திப்பு ஒன்றையும் ஏற்பாடு செய்தார். எனினும் அது சாத்தியப்படவில்லை.

இதேவேளை குறித்த முன்னாள் பொலிஸ் அதிகாரியை கைது செய்தால் பல்வேறு தகவல்களை பெற முடியும் என்று குற்றப்புலனாய்வுத் துறையினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (இ-5)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 100 | 60 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 90 | 60 | 90 | 120 | 80 |
| தக்காளி | 180 | 200 | 140 | 140 | 140 | 200 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 80 | 45 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 90 | 120 | 100 |
| கரட் | 80 | 100 | 70 | 80-200 | 80 | 120 | 80 |
| பூசணி | 30 | 40 | 15 | 40 | 30 | 40 | 30 |
| புடோல் | 50 | 60 | 30 | 80 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 30 | 30 | 25 | 40 | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 | 100 | 100 | 140 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 65 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 160 | 110 | 140 | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 80 | 60 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 100 | — | 80 | 100 |
| பயற்றங்காய் | 120 | 160 | 80 | 140 | 100 | 100 | 140 |
| லீக்ஸ் | 130 | 100 | 100 | 120 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 80 | 100 | 100 | 100 | 70 | 160 | 100 |
| கறிமிளகாய் | 150 | 100 | 100 | 80 | 80 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 150 | 350 | 200 | 250 | 250 |
| போஞ்சி | 200 | 200 | 100 | 150 | 180 | 240 | 180 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 60 | 70 | — | 80 | 90 |
| கீரை – 1பிடி | 30 | 30 | 20 | 40 | 30 | 25 | 20 |
| தேசிக்காய் | 300 | 350-450 | 350 | 400 | 360 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 15-30 | 50 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 1110 | 160 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 40 | 80 | — | — | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | — | — | — | — | — | - |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்ப்பாணத்தில் இராணுவம் பின்வாங்கியது 176

**கப்பல் தகர்ப்பு**

ஆனால், மோதல் நடந்து கொண்டிருந்தபோதே கடற்புலிகளின் தற்கொலைப் படையினர் தண்ணீருக்குள் நீந்திச் சென்று எடிதாரா என்ற கப்பலின் அடிப்பகுதியில் குண்டு வைத்தனர்.

அந்தக் குண்டு வெடித்ததில் கப்பலின் உடற்பகுதி கடுமையாகச் சேதம் அடைந்து மூழ்கியது.

கப்பலில் இருந்து கடற்படை மாலுமிகள் 3 பேரும் உயிர் இழந்தனர். குண்டு வைத்த தற்கொலைப் படையினரும் பலியானார்கள். அந்தக் கப்பலுக்கு அருகில் நின்ற மற்றொரு படகும் இந்தத் தாக்குதலில் மூழ்கியது.

மூழ்கிய கப்பல் எடிதாரா இராணுவத்துக்கு உதவுவதற்காகச் சரக்குகளை ஏற்றிச் சென்றது. காங்கேசன் துறை முகத்தில் சரக்குகளை இறக்கி விட்டு வெளியே நிறுத்தப் பட்டிருந்தபோது இந்தத் தாக்குதல் நடந்தது.

சேதம் அடைந்த நிலையில் உள்ள அந்தக் கப்பல், துறைமுகத்துக்குள் நுழையும் வழியை அடைத்தபடி மூழ்கி நின்றது.

இதனால் துறை முகத்துக்குள் மற்ற கப்பல்கள் செல்லவோ, துறைமுகத்திலிருந்து வெளியே கப்பல்கள் செல்லவோ முடியாத நிலை ஏற்பட்டது.

**பிரபாகரன் தலைமையில்...**

போர் நிலவரம் பற்றி விடுதலைப்புலிகளின் செய்தித் தொடர்பாளர் கூறியதாவது,

யாழ்ப்பாணம் நோக்கி படையெடுத்து வரும் இராணுவத்தைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைக்குப் புலிப் பாய்ச்சல் என்று பெயரிட்டுப் பிரபாகரன் தலைமை தாங்கிப் போரை நடத்தினார்.

அளவெட்டி என்ற இடத்தில் சிங்கள இராணுவத்தை விடுதலைப்புலிகள் சுற்றி வளைத்து உள்ளனர். அங்கு நடந்த சண்டையில் இராணுவத்தின் 16 கனரக வாகனங்கள் தகர்த்தப்பட்டன.

3 கனரக வாகனங்களை ஆயுதங்களுடன் கைப்பற்றினார்கள்.

இராணுவத்துக்குத் தளபாடங்களைச் சப்பிளை செய்யும் மையத்தையும் விடுதலைப்புலிகள் தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள். இதனால் இராணுவத்தினருக்கு ஆயுத சப்ளையும் நின்று விட்டது.

சுழிபுரம் என்ற இடத்திலும் இராணுவத்தினரை நகர விடாமல் விடுதலைப்புலிகள் வளைத்துள்ளனர். அந்தப் பகுதி கடலில் நின்ற கடற்படை கப்பல் ஒன்றும் மூழ்கடிக்கப்பட்டது. இராணுவத்தினர் பின்வாங்குவதற்கான வழிகளையும் விடுதலைப்புலிகள் அடைத்து விட்டனர்.

அராலி, வட்டுக்கோட்டை, சங்கானை, சண்டிலிப்பாய், மாகியபிட்டி, சீரணி, தொட்லடி ஆகிய இடங்களில் இருந்து இராணுவத்தை விரட்டி விட்டோம்.

**பேச்சுவார்த்தை இல்லை**

யாழ்ப்பாணத்தின் மீது படையெடுப்பாதால் பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று எச்சரிக்கிறோம். இராணுவ நடவடிக்கையின் மூலம் விடுதலைப்புலிகளுடன் போரிட்டு வெற்றி பெற முடியாது. இதை அரசு உணர வேண்டும்.

இராணுவத்தை வைத்து மிரட்டிப் பேச்சுவார்த்தைக்குப் பணிய வைக்க முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பேச்சு வார்த்தைக்கு வர மாட்டோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பின்வாங்கினார்கள்**

முன்னேறிய இராணுவத்தினருடன் விடுதலைப்புலிகள் தீவிரமாகப் போரிட்டு அவர்களைப் பின்வாங்கச் செய்தனர்.

இராணுவத்தினரிடமிருந்து எல்லா பகுதிகளையும் மீட்டு விட்டதாக விடுதலைப்புலிகள் 18.07.1995 அன்று அறிவித்தனர்.

லண்டனில் உள்ள விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அலுவலகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் இது பற்றி கூறியிருந்ததாவது,

**எல்லா பகுதிகளும் மீட்பு**

யாழ்ப்பாணப் பகுதியில் முன்னேறிய இடங்களிலிருந்து இராணுவத்தை விரட்ட விடுதலைப்புலிகள் புலிப் பாய்ச்சல் என்ற பெயரில் நடத்தும் தாக்குதலைத் தலைவர் பிரபாகரன் முன்னின்று நடத்தி வந்தார்.

இராணுவம் புகுந்திருந்த எல்லா இடங்களையும் மீட்டு விட்டோம்.

இராணுவத்தி னருக்கு விடுதலைப்புலிகள் சரியான பதிலடி கொடுத்து விரட்டி விட்டனர்.

**3 கப்பல்கள் மூழ்கடிப்பு**

கடற்படை மீது கடற்புலிகள், தற்கொலைப் படையினர் நடத்திய மிகப் பெரிய மோதலில் 2 கடற் படைக் கப்பல்கள், ஒரு கட்டுப்பாட்டு கப்பல் தரைக்குச் செல்லும் படகு ஒன்று ஆகியவை மூழ்கடிக்கப்பட்டன.

இஸ்ரேல் நாட்டில் தயாரிக்கப்பட்ட பல பீரங்கிப் படகுகளையும் இழுவைப் படகுகளையும் கடற்புலிகள் தகர்த்தனர்.

2,600 தொன் எடையுடைய எடிதாரா என்ற கடற்படைக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது கடற்படைக்கு பெரிய அடியாகும்.

ஏராளமான கடற்படை வீரர்களும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர். இதில் கடற்புலிகள் 17 பேர் உயிர் இழந்தனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருந்தது.



தாக்குதலுக்குத் தயாராகும் விடுதலைப் புலிகள்.

(தொடரும்)

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் தெரியவேண்டும். – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# கௌதம புத்தபகவான் என் கனவில் தோன்றினார்

கொள்ளையர்களின் பயம், வாள்வெட்டுத் திகில். போதாக்குறைக்கு வெப்பத்தின் உச்சம். இவற்றினால் உறங்கும் வழியின்றி உபாதைப்பட்ட நமக்கு அதிகாலைப்பொழுதில் உறக்கம் ஆழ்த்திக் கொண்டது.

அந்நேரம் ஒரு கனவு. கௌதம புத்தபிரான் என் கனவில் தோன்றினார்.

**நான்:**புத்தபகவானே! வணக்கம். உங்கள் வருகையால் இன்புற்றேன்.

**புத்தபகவான்:**அன்பனே! வணக்கம். யாழ்ப்பாணத்து நிலைமைகள் எப்படி இருக்கின்றன?

**நான்:**பகவான் அதை ஏன் கேட்கிறீர்கள்? உங்களுக்குத் தெரியாததா? யாழ்ப்பாணத்து மக்கள் நிம்மதியற்றவர்களாக பயப்பீதியுடன் உறங்கி விழிக்கின்றனர்.

**புத்தபகவான்:**காரணம் யாதோ!

**நான்:**சுவாமி! இரவுப்பொழுது என்றதும் கொள்ளையர்களும் வாள்வெட்டுக்குழுக்களும் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன.

**புத்தபகவான்:**பொலிஸார் என்ன செய்கின்றனர்?

**நான்:**சுவாமி! அதுபற்றி நான் கூறவிரும்பவில்லை. வில்லங்கம் வேண்டாம்.

**புத்தர்:**வடபுலத்தில் இராணுவ முகாம்கள் அகற்றப்படாமல் இருக்கின்றன. பாதுகாப்புக்காகவே இவர்கள் வடபகுதியில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியானால் இவர்கள் யாருடைய பாதுகாப்புக்காக இருக்கிறார்கள்?

**நான்:**எங்களிடம் இருந்து தங்களைப் பாதுகாப்பதற்காக.

**புத்தர்:**அன்பரே! நீர் சொல்வது புரியாமல் உள்ளது.

**நான்:**சுவாமி! தமிழ் மக்கள் மீண்டும் ஒரு போராட்டத்தை ஆரம்பித்து விடுவார்களோ! என்றொரு அச்சம் இலங்கை அரசுக்கு இருக்கிறதாம். அதனால் வட புலத்தில் நிரந்தரமாக குடியிருப்பது என படையினர் முடிவு எடுத்துவிட்டனராம்.

**புத்தர்:**அப்படியானால் படையினர் தமிழ் மக்களை பாதுகாப்பதற்கானவர்கள் இல்லையா?

**நான்:**சுவாமி! இலங்கையில் சிங்கள மக்களுக்காகவே படையினர். முப்படைகளிலும் சிங்களவர்களுக்கே இடம். தமிழர்கள் தங்கள் எதிரிகள் என்பதுதான் ஆட்சியாளர்களினதும் பேரினவாதிகளினதும் சிந்தனை.

இதனால் முப்படையினர் என்றால், அவர்கள் தமிழ் மக்களிடம் இருந்து சிங்கள மக்களை காப்பாற்றுபவர்கள் என்ற கருத்தே உள்ளது.

**புத்தர்:**அபத்தம்... அபத்தம்... என் போதனைகள் இலங்கையில் பின்பற்றப்படவில்லை என்பதையிட்டு மிகுந்த கவலை அடைகிறேன்.

(இவ்வாறு கூறிக் கொண்டே புத்தபிரான் புறப்பட்டார். நானும் அவரைப் பின்தொடர்ந்தேன். புத்தபிரான் யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தை சென்றடைந்ததும் கோபாவேசத்தோடு யாரங்கே! என்று கர்ச்சித்தார். பொலிஸ் அதிகாரிகள் ஓடி வந்தனர்.)

**புத்தர்:**பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய நீங்கள் உங்கள் கடமையை சரியாகச் செய்கிறீர்களா?

**பொலிஸ்:**மௌனம்.

**புத்தர்:**யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் முதற்கொண்டு களவு, கொள்ளை, வாள்வெட்டு சகலதும் நடக்கிறது. புகையிரதப் பாதையில் இளைஞர்களின் சடலங்கள். இங்கு என்னதான் நடக்கிறது? தமிழர்கள் என்ற இனப்பாகுபாட்டுடன் செயற்படுகிறீர்களா? அல்லது நீதிபதிகளின் உத்தரவுகளை செய்யக்கூடாது என்ற வக்கிரத்துடன் நடக்கிறீர்களா?

**பொலிஸ்:**மௌனம்

**புத்தர்:**உங்கள் கடமையை நேர்த்தியாகச் செய்யுங்கள். பொதுமக்களை காப்பாற்றுவது உங்களின் கடமை. போரினால் நொந்துபோன தமிழ் மக்களை தொடர்ந்தும் நோகடிக்காதீர்கள். இது என் கடுமையான எச்சரிக்கை.

*(இவ்வாறு புத்தபிரான் உரக்கச் சொன்னபோது திடுக்குற்று விழித்தேன். கண்டது கனவு என்று அறிந்தேன்)*

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு அரசின் வாழ்வாதார உதவிகள்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சானது அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் வழிகாட்டலில் 30 வருடகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கும் தமிழ் நாட்டிலிருந்து வருகைதரும் இலங்கை அகதிகளுக்கும் வாழ்வாதார வாய்ப்புக்களை வழங்கும் நோக்குடன் வாழ்வாதார செயற்றிட்டங்களை மாவட்ட செயலகங்கள் ஊடாக அமுலாக்கி வருகின்றது.

மீள்குடியேற்றப்பட்ட ஒவ்வொரு குடும்பங்களுக்கும ஒரு இலட்சத்திற்கும் மேறபடாமல் கால்நடை வளர்ப்பு, கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு, சிறுதொழில் முயற்சிகள், குடிசைக் கைத்தொழில்கள் மற்றும் உள்ளூர் மூல வளங்களைப் பயனபடுத்தி செய்யப்படும் சிறுகைத் தொழில்கள், விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில் என்பவற்றிற்காக வழங்கப்படுகின்றன.

இதனை அமுல்படுத்துவதற்காக 2016ஆம் ஆண்டு அமைச்சானது ரூபாய் 1,205 மில்லியன் நிதியினை ஒதுக்கியுள்ளதுடன் இதன் மூலம் 12,050 குடும்பங்கள் (50 ஆயிரம் பயனாளிகள்) பயனடைவர் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு மீள்குடி யேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

வாழ்வாதார செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 ஆயிரம் குடும்பங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் 1,600 குடும் பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1,500 குடும்பங்களும் மன்னார் மாவட்டத்தில் 1,600 குடும்பங்களும் வவுனியா மாவட்டத்தில் 1,500 குடும்பங்களும் திருகோணமலை மாவட்டத்தில 1,300 குடும்பங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 1,000 குடும்பங்களும் அம்பாறை மாவட்டத்தில் 550 குடும்பங்களும் ஆக மொத்தம் 12,050 குடும்பங்கள் பயன்பெறுகின்றனர். பயனாளிகள் தெரிவானது உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள், தமிழ் நாட்டிலிருந்து வருகைதரும் இலங்கை அகதிகள், புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் மீள் ஒருங்கிணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள், காணாமற்போன அங்கத்தவர்களைக் கொண்ட உள்ளூர் இடம்பெயர்ந்த குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் அங்கவீனர்கள் என்பவர்களை முன்னுரிமைப்படுத்தியதாக அமையும் என அமைச்சின செயலாளர் தெரிவித்தார்.

இதுவரை ரூபாய் 580 மில்லியன் இந்நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மாவட்ட செயலகங்களுக்கு இவ் அமைச்சினால் விடுவிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் இன்றியமையாத போதிலும் நிலைத்து நிற்கக் கூடிய வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வாழ்வாதாரமும் இன்றியமையாததாகும் எனவும் தெரிவித்தார். (இ-5)

# அமைப்பாளர்களை நியமிக்க மகிந்தவுக்கு அதிகாரமில்லை

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சியின் தலைவர் அல்லாத வெளி நபர்களுக்கு கட்சியின் அமைப்பாளர்களை நியமிக்க அதிகாரம் கிடையாது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கட்சியின் நலனுக்காக பாடுபடும் ஒருவரையே தொகுதியின் அமைப்பாளராக கட்சி நியமிக்கும்.

சிறு குழுவொன்றின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் செயற்படுபவர்களை கட்சி கண்டுகொள்ளாது எனவும் அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இப்பாகமுவவில் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஹிரியால தொகுதி கூட்டத்தில் மீண்டும் சாலிந்த திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து ஐ.ம.சு.மு. செயலாளரிடம் வினவியதற்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஏற்கெனவே, ஹிரியால தொகுதியின் அமைப்பாளர் பதவியிலிருந்து சாலிந்த திஸா நாயக்க ஸ்ரீ.ல.சு கட்சியின் நிறைவேற்றுக் குழுவினால் நீக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

### குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

**வினா இல.17**

**(அத்.2.ஸ்லோ.62,63)**

**மனிதன் வீழ்ச்சி ஏணியில் படிப்படியாக இறங்கி வரும் முறையை குறிப்பிடுக?**

விடை:இந்திரிய விடயங்களை சிந்தித்து கொண்டு இருத்தல், பற்று, ஆசை, கோபம், மோகம் (மயக்கம்), நினைவுத் தடுமாற்றம், புத்திநாசம் ஏற்படல் (ஞாபகமறதி) அழிந்து போதல்

**வினா இல.18**

**(அத்.2.ஸ்லோ.62,63)**

**மனிதன் வீழ்ச்சி ஏணியில் அகப்படாமல் உயர் நிலையை (விடுதலையை) அடைவது எவ்வாறு?**

விடை: தன்வசப்பட்ட மனதுடைய சாதகன் விருப்பு வெறுப்புகள் இன்றி தன்னால் வசப்படுத்தப்பட்டுவிட்ட இந்திரியங்களைக்கொண்டு விடயங்களில் சஞ்சரித்துக் கொண்டு மன அமைதி நிலையை அடைகிறான்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில் சங்கத்தானை, டச்சு றோட், அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மணகும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் ஆதி விநாயகர் கோவில் பிரதேசம், குருமன்காடு பிள்ளையார் கோவில் பிரதேசம், மாமடுசந்தியிலிருந்து பதவியா வரை, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில் முதலைக்குத்தி ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)

# மண்ணெண்ணெய் ஊற்றி பெண்ணின் மீது தீ வைப்பு

பெண் ஒருவர் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ மூட்டிய சம்பவம் ஒன்று மாத்தறை - வெலிகம, ரலகம பிரதேசத்தில் நடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீக்காயங்களுக்கு உள்ளான 33 வயதான பெண் வெலிகம - வலான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உடல்நிலை மோசமானதன் காரணமாக மாத்தறை வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (இ-5)

# ஆப்கானில் டேங்கர் லொறி மீது பேருந்து மோதி பயங்கர விபத்து!

ஆப்கானிஸ்தான் நாட்டின் கிழக்கு மாகாணங்களில் ஒன்றான கான்ஸியில். உள்ள கந்தஹார்-காபுல் இணைப்பு நெடுஞ்சாலை வழியாகவந்த பேருந்து எதிர்த்திசையில் வேகமாக வந்த பெற்றோல் டேங்கர் லொறி மீது நேற்று நண்பகல் பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் பெற்றோல் டேங்கர் லொறியும் பேருந்தும் தீ பிடித்து எரிந்தன.

இந்த விபத்தில் குழந்தைகள், பெண்கள் உட்பட 52 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், படுகாயமடைந்த 73 பேர் அருகாமையில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கான்ஸி மாகாண அரசு செய்தி தொடர்பாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (இ-5)

# சிரியாவுக்குள் நுழைந்து துருக்கி போர் விமானங்கள் தாக்குதல்

## 55 ஐ.எஸ்.தீவிரவாதிகள் பலி

ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளை கைப்பற்றி அங்கு அட்டூழியம் செய்துவரும் ஐ.எஸ். தீவிரவாதிகள் சிரியாவின். அண்டைநாடான துருக்கியின் எல்லைப்பகுதி அருகே முகாம்களை அமைத்து அங்கிருந்தவாறு துருக்கியின் முக்கிய நகரங்களை கைப்பற்ற முயன்று வருகின்றனர்.


இந்த முயற்சியை முறியடிக்க துருக்கி இராணுவம் கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எனினும், நவீனரக றொக்கெட்கள் மற்றும் ஏவுகணைகளை துருக்கியின் மீது வீசி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு பதிலடியாக, சிரியாவின் அலெப்போ நகரில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளின் முகாம்களை குறிவைத்து போர்விமானங்கள் மற்றும் ஆளில்லா விமானங்களின் மூலம் நேற்று முன்தினம் துருக்கி இராணுவம் அதிரடி தாக்குதலில் ஈடுபட்டது.

இந்த தாக்குதலில் ஐ.எஸ. தீவிரவாதிகள் 55 பேர் கொலலப்பட்டதாக துருக்கி ஊடகங்கள் நேற்று தெரிவித்துள்ளன. ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு சொந்தமான மூன்று இராணுவ வாகனங்கள் மற்றும் றொக்கெட் ஏவுதளங்கள் இந்த தாக்குதலில் அழிக்கப்பட்டதாக துருக்கி இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)

## வடமாகாண வல்லவன் -2016

# கொற்றாவத்தை சிவானந்தாவை வென்றது மெலிஞ்சிமுனை இருதயராஜா வி. கழகம்



பருத்தித்துறை உதைபந் தாட்ட சங்க அனுமதியுடன் நெற் கொழு கழுகுகள் விளையாட் டுக்கழகம் நடத்தும் வடமா காண வல்லவன் 2016 மாபெ ரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முதலாம் சுற்று ஆட்டத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டி யில் மெலிஞ்சிமுனை இருதய ராஜா வி.கழகத்தினை எதிர் த்து கொற்றாவத்தை சிவா ணந்தா வி.க மோதியது.

ஆட்டத்தின் 5 ஆவது நிமி டத்தில் சிவானந்தா வி.கழகத் திற்கு கிடைக்கப்பெற்ற சுயா தீன உதையின் மூலம் லங் கேஸ் முதலாவது கோலினை பெற சிவானந்தா வி.க. 1:0 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்து ஆட்டத்தினை விரைவுபடுத்திய இருதயரா ஜா வி.க. 13 ஆவது நிமிடத்தில் ஜெனெற்ரினுடைய கால்க ளால் 01 கோலினை பெற ஆட்டம் மீண்டும் சமநிலை யானது. வெற்றியை தீர்மா னிக்கும் இரண்டாவது பாதி ஆட்டத்தின் 05 ஆவது நிமிடத் தில் இருதயராஜா வி.க ஜெமி லியஸ் இன் துடிப்பான ஆட் டத்தின் மூலம் 02 ஆவது கோலினை பெற்றது. மிகுதி நேர ஆட்டத்தில் சிவானந்தா வி.க. முயற்சிகள் இலாபக மாக முறியடிக்கப்பட 2:0 என்ற கோல் கணக்கில் இருதயராஜா வி.க. வெற்றி பெற்றது. போட் டியின் ஆட்ட நாயகனாக இரு தயராஜா வி.க வெற்றி பெற் றது. போட்டியின் ஆட்ட நாய கனாக இருதயராஜா வி.க வீரர் ஜெமிலியஸ் தெரிவு செய் யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத்தினை முன்னாள் பருத்தித்துறை பிர தேச சபை உறுப்பினர் கு.பன் னீர்ச்செல்வம் வழங்கி கௌர வித்தார். (கு)





## நெற்கொழு கழுகுகள் விளையாட்டு கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

### சென்.மேரிஸ் வெற்றி





பருத்தித்துறை உதைபந் தாட்ட அனுமதியுடன் நெற் கொழு கழுகுகள் விளையாட் டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் 2016 மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட் டியின் முதலாம் சுற்று ஆட் டத்தில் நேற்று முன்தினம் நடை பெற்ற இரண்டாவது போட்டி வவுனியா மருதநிலா வி.கழ கத்தினை எதிர்த்து இரணை மாதா நகர் சென்.மேரிஸ் வி.க (கிளிநொச்சி) மோதியது. விறு விறுப்பான முதலாவது பாதி ஆட்டத்தில் இரு அணியினரா லும் கோலினை பதிவு செய்ய முடியவில்லை.

மேலும் விறுவிறுப்பான வெற்றியினை தீர்மானிக்கும் இரண்டாவது பாதி ஆட்டத்தி லும் கோல் எதுவும் பதியப்ப டாததால் சமநிலை தவிர்ப்பு உதைக்கு தள்ளப்பட்டது. பர பரப்பான சமநிலை தவிர்ப்பு உதையில் 3:2 என்ற கோல் கணக்கில் இரணைமாதா நகர் சென்.மேரிஸ் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயக னாக சென்.மேரிஸ் வி.க வீரர் றோயல் பிரதீப் தெரிவு செய் யப்பட்டு அவருக்கான பணப் பரிசு மற்றும் பதக்கத்தினை முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் கு.பன்னீர்ச்செல்வம் வழங்கி கௌரவித்தார். (கு)

## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற் கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறும் போட்டியில் சிறி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அரியாலை ஐக்கியம் விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட் டுக்க ழகத்தை எதிர்த்து நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளன. (கு)

◆◆◆

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட் டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடை பெறும் போட்டியில் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்க ழகத்தை எதிர்த்து அண்ணா ஸ்டார் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக்கழகததை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளன.

## தெல்லிப்பழை நாமகள் வி. கழக உதைபந்தாட்ட அரையிறுதி இன்று



கம்பர்மலை யங்கம்பன்ஸ்



மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ்



உடுப்பிட்டி நவஜீவன்ஸ்



சாவற்காடு மகாத்மா

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் 53 ஆம் ஆண்டு நிறைவை முன்னி ட்டு கழகங்களுக்கிடையே நடத் தும் உதைபந்தாட்ட போட் டியின் அரையிறுதிப்போட்டி இன்று திங்கட்கிழமை பிற்ப கல் 3.45 மணிக்கு நாமகள் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறவுள்ளது. வலி காமம் விக்கு மட்டும் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர் த்து சாவற்காடு மகாத்மா விளை யாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

மாவட்ட ரீதியில் நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் மாலை 4.45 மணிக்கு நடை பெறும் போட்டியில் உடுப்பி ட்டி நவஜீவன்ஸ் விளையாட் டுக்கழகத்தை எதிர்த்து கம்பர் மலையங்கம்பன்ஸ் விளையாட் டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

## ஒற்றுமையாக...

தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 30ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை அரசு எமது இனத்தை நசுக்க நினைத்த காரணத்தால் அகிம்சை போராட்டம் குழிதோண்டி புதைக்கப்பட்டு ஆயுதப் போராட்டத்தின் மூலம் விடிவை எட்ட முடியும் என்ற நம்பிக்கையுடன் ஆயுதப் போராட்டத்தை தொடங்கினோம்.

எனினும் ஆயுதப்போராட்டத்தால் ஈழத்தை அடையமுடியும் என்ற நம்பிக்கை சிதைக்கப்பட்டு இன்று ஒரு அரசியல் தீர்வு கிடைக்குமா கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டும் அகிம்சை போராட்டத்தை நடத்தவும், எமது விடிவுக்கு ஐ.நாவிடம் செல்லவேண்டும் சர்வதேசத்தை அழைக்க வேண்டும் என செயற்பட்டுக் கொண்டிருப்பதும் எங்களுக்குள் ஒருவருக்கொருவர் துப்பாக்கிகளை நீட்டிய தன் பெறுபேறுதான் தற்போது அதை அனுபவிக்கிறோம்.

ஒற்றுமை என்பது நாம் வரலாற்று ரீதியாக பார்த்த உண்மை. இந்த ஒற்றுமை இல்லை என்றால் எங்களுடைய, இனத்தின் நிலைமை எப்படி இருக்கும் என்பதை தற்போது அறிந்துள்ளோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பாக இருக்கலாம் ஏனைய கட்சிகளாக இருக்கலாம் எங்களுக்கு முன்னால் உள்ள உதாரணங்களை படித்தறிந்து செயற்படாவிட்டால் எமது இனத்தை மீண்டும் எந்தவழியும் கிடைக்காத இனமாக தேவைக்கு கையேந்தும் இனமாக செல்லும் வாய்ப்பை இட்டுச் செல்லப்போகிறோம் என்ற அபாயநிலை இப்போது இருந்து கொண்டு இருக்கிறது.

சிறீ சபாரத்தினம் ஒற்றுமை என்பதை ஆழமாக சிந்தித்தார். சிறப்பாக செய்து காட்டினார் என்பதை அனைத்து இயக்கங்களும் அறிந்திருந்தார்கள். கடந்தகாலத்தில் நண்பர்களின பிரிவும் வேதனையை தந்தது. ஒற்றுமையான சூழல்களையும் இழந்த நிலையில் இருந்தோம், பின் பிரிந்தோம்.

இன்று அனைத்து விடயங்களிலும அனுபவங்களை தாண்டிவந்து மக்களை இழந்து புதிய அரசு ஏதாவது செய்யும் என்ற நம்பிக்கையில் இருந்தோம். ஆனால் அவையும் அழிந்து கெடுபிடிகள் அச்சத்தை உருவாக்கியுள்ள நிலையில் எதிர் அணியினர் எமது கருத்துக்கள் அனைத்துக்கும் எதிராக செயற்படும் நிலையில் நாம் ஒற்றுமைப்படவில்லை என்றால் எமது இனத்தின் அழிவுக்கு நாம் காரணமாகி விடுவோம்.

நாம் ஒற்றுமைப்பட வேண்டும் ஒன்றாக இருக்கவேண்டும், ஒன்றாகசெயற்பட்டால் தான் விடிவு கிடைக்கும் என உதட்டளவில் எவரும் பேசக்கூடாது என்பதை கூறிக்கொள்கிறேன்.

வெறுமனே உதட்டளவில் பேசி செயற்பட்டால் எமது இனத்தை அடுத்தவர்களிடம் கையேந்தும் நிலைக்கு கொண்டு சென்று விடுவோம்என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

எமது இனத்தை எவரிடமும் கையேந்தும் நிலைக்குகொண்டு செல்ல ஒருபோதும் இடமளிக்க கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9

## டிப்பர் விபத்தில்...

சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான இராசப்பு பாலுப்பிள்ளை வயது(54) என்ற வண்டில்காரரே உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி பருத்தித்துறையில் இருந்து இரண்டு சவாரிமாடுகளை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு வாங்கிவிட்டு அவற்றை மறுநாள் 02ஆம் திகதி வண்டியில் பூட்டி எடுத்துசென்று கொண்டிருந்தார்.

அதிகாலை 5.00 மணியளவில் எழுதுமட்டுவாழ் பகுதிக்கும் முகாமாலை பகுதிக்கும் இடையில் சென்று கொண்டிருந்த போது பின்னால் வேகமாக வந்த டிப்பர் வாகனம் அவரை வண்டியுடன் சேர்த்து மோதி தள்ளியது.

இச் சம்பவத்தில் மாடு ஒன்று உயிரிழந்ததுடன் இவர் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றையதினம் அதிகாலை உயிரிழந்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மரண விசாரணையை மேற்கொண்டதுடன் உடற் கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-9)

## போற்றப்படும்...

தமிழ் மக்களின் கடந்த கால கசப்பான அனுபவங்கள் இனிவரும் காலங்களில் நடக்காமல் தடுப்பதற்கு தமிழர்கள் மத்தியில் ஒற்றுமை மட்டுமே தேவை என பிரபல இந்திய பத்திரிகையாளர் பகவான் சிங் தெரிவித்துள்ளார்.

இவர் 1983ஆம் ஆண்டு தமிழினப் படுகொலைகளை தொடர்ந்து ஆயுதப்போராட்டம் எழுச்சி பெற்ற நேரத்தில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்து வடகிழக்கு மாகாணத்தின் உண்மை நிலைவரத்தை "த வீக்" என்ற ஆங்கிலப் பத்திரிகை மூலம் இந்திய நாட்டின் கவனத்துக்கு கொண்டு வந்தவர். தற்போது டெக்கன் குறோனிக்கிள் என்ற ஆங்கில தினசரியின் ஆசிரியராக கடமையாற்றுகிறார்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினத்தின் 30ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எந்த ஒரு இனமும் தமது வரலாறு பற்றி தெரிந்திருக்க வேண்டும். எமது வரலாறும் எம்மை உறுத்தவேண்டும். அதை நினைவுபடுத்த வேண்டும் என்பது அனைவருக்கும் அவசியம்.

தமிழர்கள் மத்தியில் உள்ள ஒற்றுமை பற்றி நான் முக்கியமாக கூறவேண்டும். தமிழ் இனம் உலகத்திலேயே போற்றப்பட வேண்டிய இனம் முதன்மையான இனம். ஆனால் ஏன் பிரிந்து இருக்கிறார்கள் பிரிந்ததனால் தான் இவ்வளவு கஷ்டங்கள் வேதனைகளை அனுபவித்துள்ளார்கள். இவ்வாறான துன்பங்களை இனி எதிர்கொள்ளக்கூடாது என்பதற்கு அனைவரும் சேர்ந்திருக்கவேண்டும் என்பதை நீங்கள் முடிவு செய்யவேண்டும்.

எனது நண்பர் ஒருவர் சொன்னார். எமது பிரதேசத்தில் நாம் பிள்ளையார் கோவில் ஆரம்பித்தோம். நிர்வாகத்தில் சண்டை ஏற்பட்டதால் வேறு கோவில் ஆரம்பித்தோம். அதனை தொடர்ந்து தற்போது 7 கோவில்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஒற்றுமையை உடைத்ததால் கோவில்கள் அதிகரித்துள்ளமை என்பது ஒரு துக்கமான விடயம். இது மாறவேண்டும். அந்த எண்ணம் உங்கள் மத்தியில் வரவேண்டும்.

ஒருமுறை சிறீ சபாரத்தினம் என்னிடம் பிரபாகரன் எங்களுடைய விடுதலை போராட்டத்தில் முக்கியமான ஒருவர். அவர் எமக்கு தேவை. நாம் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என தெரிவித்தார். இந்த எண்ணம் பிரபாகரனிடம் இருந்திருந்தால் இன்று ஈழத் தமிழர்களின் வரலாறு வேறு மாதிரி இருந்திருக்கும்.

தமிழர்படும் வேதனையை உலகுக்கு தெரிவித்தேன். அதில் பெருமைப்படுகிறேன். இதுவரை தமிழ் இனத்துக்காக பல தமிழ் இளைஞர்களை பல உயிர்களை இழந்துள்ளோம். கடந்த காலங்களில் நடந்த சம்பவங்களை மறக்காமல் நமக்கு கிடைத்த இக்கட்டான சூழ்நிலையை கருத்தில் கொண்டு கெட்ட அனுபவங்கள் நடக்காமல் இருக்க வேண்டும் என்றால் தமிழர் மத்தியில் ஒற்றுமை தேவை.

தமிழர்களிடம் நான் கண்ட கசப்பான அனுபவம் என்னவென்றால், தமிழர்கள் மத்தியில் அதிகம் பயன்படுத்தும் சொல் துரோகி. ஒருவரை பிடிக்கவில்லை என்றால் அவர் துரோகி, எம்க்கு பிடிக்காத ஒருவரிடம் எமக்கு தெரிந்தவர் பேசினால் அவரும் துரோகி என கூறும் பழக்கம் உள்ளது. நண்பர் என்ற வார்த்தையை பயன்படுத்துவதில்லை. நட்பை வளர்த்துக் கொள்ள பழகுங்கள் அதுவே சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## புகையிரதம்...

யாடியவாறு புகையிரத கடவையை கடக்க முற்பட்ட வேளையே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறித்த நபர் ஒருமாத காலமாக பரந்தன் பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கி இருந்ததாகவும் அவரின் ஒரு காது கேட்கும்திறன குறைவு எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் யாழிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த விபத்தை ஏற்படுத்திய புகையிரத்திலேயே கிளிநொச்சி புகையிரத நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது.

பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் சடலம் பிரேத பரிசோதனைக்காக அங்கு வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-15-281-312)

## இணைந்த நேர...

மாகாண இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய முகாமையாளர், வடமாகாண தனியார் பேருந்து உரிமையாளர் சங்க ஒன்றியத் தலைவர், அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜேரத்ன, இதனோடு தொடர்புபட்ட இன்னும் பலரும் கலந்து கொண்டதாக அறியக் கிடைக்கின்றது. இச் சந்தர்ப்பத்தில் ஆளுநரும் வட மாகாண போக்குவரத்து அமைச்சரும் சேர்ந்தது இணைந்த நேர அட்டவணையின் முக்கியத்துவம் தொடர்பாகவும் அதன் அமுலாக்கத்தை விரைவுபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் இரு தரப்பினருக்கும் மிகவும் தெளிவான முறையில் எடுத்துக் கூறியிருப்பதாகவும் தெரியவருகின்றது. இதன் பின்னர் இரு பேருந்து சேவை வழங்குனர்களும் குறித்த இணைந்த நேர அட்டவணையில் தமது இணக்கப்பாட்டினை தெரிவித்து கையொப்பத்தை இட்டுள்ளனர். அச் சந்தர்ப்பத்தில் இணைந்த நேர அட்டவணையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தமது இணக்கப்பாட்டை தெரிவித்த இரு தரப்பினருக்கும் போக்குவரத்து அமைச்சரும், ஆளுநரும் நன்றிகளை தெரிவித்திருப்பதாகவும் அறிய வருகின்றது.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், இணைந்த நேர அட்டவணை அமுல்படுத்தப்படுகின்ற போது அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற இலங்கை போக்குவரத்து சபையின் சாலை முகாமையாளர்களும், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களின் தலைவர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் உரிய கவனமெடுத்து நடைமுறைப்படுத்துமாறும் தெரிவித்ததுடன் நேர இடைவெளிக்கு ஏற்றாற்போல் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் தமது சேவையினை தொடர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இதனை மீறுகின்ற தரப்பினருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும். இது வெறுமனே ஒரு கூற்று அல்ல எனவும் அமைச்சரினால் விடப்படுகின்ற கட்டளையாக கருத வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு இணைந்த நேர அட்டவணையின் அமுலாக்கத் திகதி உத்தியோகபூர்வமாக சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு விரைவில் அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## இன விடுதலைச்...

யீடு நேற்றைய தினம் காலை 8.30 மணியளவில யாழப்பாணம் கல்வியியற் கல்லூரி பிரதான கலையரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழினம் என்பது ஒரு நாகரிகமற்றது. அவர்களிடம் ஒரு நாகரித்தன்மையான வாழவில்லை, அவர்கள் எப்போதும் ஆயுதங்கள் மற்றும் வாள்வெட்டுக்கள் மீதுதான் மோகம் கொண்டவர்கள். இல்லையென்றால் அவர்கள் தண்டவாளத்தில் தலையை வைத்து தற்கொலை தான் செய்வார்கள். இன்று (நேற்று) 24 மணித்தியாலத்திற்குள் யாழ்ப்பாணத்தில் மூவர் தண்டவாளத்தில் தலை வைத்துள்ளதாக கேள்விப்படுகின்றோம்.

எமது தேசியத்தின் அடையாளமே யாழ்ப்பாணம் தான், ஆனால் எல்லா அடையாளத்தையும் சிதைக்கும் தோற்றம் பெறும் இடமாகவும் யாழ்ப்பாணமே உள்ளது. ஆகவே இந்த யாழ்ப்பாணம் என்பதனை சிதைத்தால் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து இடங்களுமே இலகுவாக அழிக்கப்பட்டு விடும். இதனை பேரினவாதம் நன்கு தெரிந்து வைத்துள்ளது. யாழ்ப்பாணம் என்பது தான் எமது தளம் இந்த தளத்தை நாங்கள் இழந்தால், தமிழினம் சிந்தனைகளையே இழந்துவிடும்.

தற்போது யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வருகின்ற போதைவஸ்து, வாள்வெட்டு கலாசாரம் ஆகியவை எமது இனத்தை அழிக்கும் நோக்குடனேயே இடம்பெற்று வருகின்றன. எவ்வளவுதான் சிறந்த நீதிபதி சட்டங்கள் மூலம் இவற்றை கட்டுப்படுத்த முயன்றாலும், இவ்வாறு ஒரு சிறந்த நீதிபதி தமிழர்களுக்கு கிடைப்பார்களா என்று நினைக்கும் நிலையில் கூட இவ்வளவு தூரம் குற்றச்செயல்கள் அதிகரித்து கொண்டே செல்கின்றது.

பட்டப்பகலில் இவ்வளவு குற்றச்செயல்கள் நடைபெறுகின்றது என்றால் உண்மையிலேயே நாங்கள் மிகவும் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கின்றோம். இந்த மண் போதைப்பொருட்களை எவ்வளவு அதிகமாக உட்கொள்கின்றது என இன்றைய பத்திரிக்கை செய்திகள் காட்டுகின்றன. ஆனால் இதற்கு பின்னால் ஒரு விடயம் உள்ளது.

ஆகவே இவை எல்லாம் எங்களுக்கு முன்னாலே இருக்கின்ற எங்களை நாங்களே கேட்கும் கேள்விகள். ஒரு பெரிய சமுதாயத்தை கட்டியெழுப்புபவர்களாக ஆசிரிய மாணவர்களாகிய நீங்கள் மாறப்போகின்றீர்கள். ஆகவே இவை எல்லாவற்றையும் நீங்கள் அறிந்து வைத்திருக்க வேண்டும். நாங்கள் மிகப்பெரும் போராட்டத்தை இன விடுதலைக்காக நடத்தியவர்கள். எமது வாழ்வியல் மிகவும் அற்புதமானவை.

இன்னும் அந்த நினைவுகளும் கனவுகளும் எண்ணங்களும் எம்மை விட்டு நீங்கவில்லை. இந்த கல்லூரிக்கு நான் வருகின்ற போது, கோப்பாய் துயிலுமில்லத்தை பார்த்தேன், அதில் இராணுவ முகாம் அமைத்து இராணுவம் சப்பாத்து கால்களுடன் புதைக்கப்பட்ட எமது பிள்ளைகளின் முகம்களிலே அவர்கள் காலூன்றி நிற்கின்றார்கள். எமது குழந்தைகளின் முகங்களில் இராணுவம் சப்பாத்து கால்கலோடு நிற்கும் நிலையில் நாங்கள் எவ்வாறு நல்லிணக்கம் பற்றி யோசிக்க முடியும்?

எங்களுடைய காணிகளை இராணுவம் அளக்க நினைக்கும் போது, அடாத்தாக பறிக்க நினைக்கும் போது நீங்கள் சமாதானம் பற்றி எமக்கு சொல்கின்றீர்கள். இராணுவம் எங்களுடைய பிள்ளைகளை அடாத்தாக பிடிக்கும் போது நாங்கள் இராணுவத்தோடு இசைந்து செல்ல வேண்டும் என எங்களுக்கு அறிவுரை கூறுகின்றார்கள். இவை எல்லாம் ஆக்கிரமிப்பு சிந்தனை கொண்டவர்கள் எங்கள் மீது திணிக்கும் மறைமுகமான ஆயுதங்களாகும்.

இதனை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். எங்கள் வரலாறுகள் சரித்திரங்கள் அழிக்கப்படுவதனை மறக்கடிக்கப்படுவதனை நாம் உணர வேண்டும். தந்தை செல்வாவிற்கு பிறகு வேலுப்பிள்ளை பிரபாகரன் எமது தமிழ்த் தேசிய தலைவர் என்பதனை கூற யாரும் தயங்கத் தேவையில்லை. எமது விடுதலை வேட்கை தொடர வேண்டும் என்றார் சிவஞானம் சிறிதரன். (செ-4)

## 58 நிபந்தனைகளை...

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது, தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு புதிய வழிமுறைகளை ஏற்படுத்துதல், புலம்பெயர் தமிழர்கள் மற்றும் அமைப்புகளின் பெயர்களை தீவிரவாதப் பட்டியலில் இருந்து நீக்குதல், புதிய அரசியல் யாப்பின் ஊடாக அதிகாரங்களை பகிர்தல், வடக்கில் கைப்பற்றப்பட்ட அனைத்து தனியார் காணிகளையும் மீள ஒப்படைத்தல், மீள குடியேற்றம் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் கொள்கை ஒன்றை வகுத்தல், இடம் பெயர்ந்துள்ள அனைவரையும் மீளக்குடியேறல் மற்றும் காணாமற் போனவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கல் உள்ளிட்ட பல விடயங்கள் அந்த நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படும் பட்சத்திலேயே ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிப்பது தொடர்பில் சிந்திக்க முடியும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. குறுகிய காலப்பகுதிக்குள் இந்த கடுமையான நிபந்தனைகள் நிறைவேற்ற வேண்டுமென இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளதோடு, இது தொடர்பில் பேரம் பேசுவதற்கோ அல்லது நிபந்தனைகளை விதிப்பதற்கோ இலங்கை அரசாங்கத்திற்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது எனவும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நிபந்தனைகளுக்காக வெளிவிவகார அமைச்சு இணக்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளதோடு, இந்த விடயம் குறித்து ஆராய்வதற்கு செயற்குழு ஒன்றையும் நியமித்துள்ளார். இதேவேளை மேலும் கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வெளிவிவகார அமைச்சு எதிர்பார்த்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த நிபந்தனைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் அவதானித்து வருவதோடு, முன்னேற்றங்கள் தொடர்பில் ஆராய்வதாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டேவிட் டெலி தெரிவித்துள்ளார். (செ-12)

வாழ்க! இன்று போல் என்றும்

# உயர்திரு.அ.ஸ்ரனிஸ்லாஸ்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)

## தீவக கல்வி வலயம்



தீவகம் உங்கள்
சொந்த மண்ணல்ல - எப்படி
சப்த தீவுகளுக்கும் சொந்தமாயானீர்
காரணம் கண்டறிய
கனநேரம் ஆகவில்லை.
அர்ப்பணிப்பும் தியாக சிந்தையும்
உள்ளத்து உறுதியும்
நேர்மையும் வாய்மையுமே - உங்களுக்கு
அந்த வாய்ப்பைத் தந்ததென்று அறிந்தோம்
இதனால்தான் தீவக மண்ணின்
மைந்தனாய் ஆனீர்

ஈரெட்டு வருடங்களுக்கு மேல்
அதற்குள் நகர்ந்ததா?
ஆறு பத்து வருடங்கள்
அதற்குள் எட்டியதா?
ஈர்நான்கு கல்விப் பணிப்பாளர்களுக்கும்
பக்கத்துணை நீங்கள்.........''
அதிசயமாய் இருக்கிறது
ஆயிரம் செயலமர்வுகள் கண்டிருப்பீர்!!
ஆசிரியர் மகாநாடும் அற்புதமாய் முடித்திருந்தீர்!
நீங்கள் இல்லாத - பௌர்ணமி விழாக்கள்
நாம் கண்டதில்லை.
98-ல் தீவகம் ஓய்ந்திருந்தவேளை
காய்ந்து போன தேசமாய் - எம்
தீவகம் நின்றிருந்த வேளை.........
கனவுகளை கண்களில் ஏந்தி
மாணவர்கள் விடியல் தேடிய வேளை

ஒளிக்கீற்றாய் **ஸ்ரனிஸ்** எனும் நாமம்
தீவகத்தில் படர்ந்ததாய் நாம் அறிந்தோம்.........!
மெல்ல மெல்ல தட்டி
கொஞ்சம் கொஞ்சமாய் நகர வைத்து இன்று
வேகமெடுத்த தீவகக் கல்வியின்
இயந்திரம் நீங்கள் தான் என்பதை
மறுப்பவரும் இல்லை.
மாற்றுக்கருத்து உடையோருமில்லை.........!

தீவகக் கல்வி அபிவிருத்தி எனும்
நிலையான இடத்தில்
அழியாமல் என்றுமே - உங்கள் தடம்
பதிந்திருக்கும்...!
இயற்கையும் செயற்கையும்
இயன்றவரை எமக்கு எதிரி தான் -
ஆனாலும் நீங்கள்
அலையெறியும் கடல் தாண்டி
நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு,
எழுவைதீவு என
இராப்பகல் தங்கித்தானே
கல்வியின் தரம் பார்த்தீர்கள் - அதனால்
உங்கள் ஓய்வை
ஒரு முறை ஆய்வு செய்தால் என்ன?
என்று தான் எல்லோரும் நினைக்கின்றோம்
பாரதத்தில் வீஷ்மர்
இராமாயணத்தில் வசிட்டர் - எங்கள் தீவகத்தில்
என்றுமே நீங்கள் .........!!!!

உங்கள் குணத்திலும்
குறையொன்றுமில்லை.........
கடமையிலும் கறையொன்றுமில்லை
நிறைவாக அந்த இறை ஆசியோடு
ஐயா! நீங்கள் வாழ்க ! வாழ்க! வாழ்கவே!
இந்நாள் போல் எந்நாளும்
வளமாக வாழ்கவே!

கவிதையாக்கம்
த.தயாபரன் (ஆசிரியர்)
அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்
அல்லைப்பிட்டி.

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், அலுவலக ஊழியர்கள்
வேலணைக் கோட்டம்,
வேலணை.

(C-4565)

## சொல்ஹெய்முக்கு...

செயலகத்தில் உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றாடல் திட்டத்துக்கான நிறைவேற்று பணிப்பாளராக அவரை செயலாளர் பன் கீ மூன் நியமித்துள்ளார்.

குறித்த சுற்றாடல் திட்டம் அமைப்பின் மேற்கொண்ட பரிந்துரைக்கு அமையவே எரிக் சொல்ஹெய்ம் அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

சொல்ஹெய்ம், தறபோது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி துணைக்குழுவின் தலைவராக 2013 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டுவருகிறார்.

சொல்ஹெய்ம், 2000 ஆண்டுகளில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தூதுவராக 'செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

## குளிர் பானங்களை...

டாம் என அரச வைத்திய அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டும் போதே அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நலந்த ஹேரத் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பானங்களை பருகுவதன் ஊடாக, மீண்டும் உடலில் நீரற்ற நிலை ஏற்படும்.

நீருக்கு பதிலாக, இளநீரை பருகலாம். ஆனால் குளிர்பானங்கள் என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்ற காபன் ஏற்றப்பட்ட பானங்களை பருகுவதால், பாதிப்புகளே ஏற்படும்.

அதிக வியர்வை ஏற்படுவதால் தோல் சம்பந்தமான நோய்கள் ஏற்பட வாய்ப்புகள அதிகம்இருக்கின்றன.

நீர் அதிக அளவில்பருகுவதைஉறுதி செய்ய வேண்டும். குறிப்பாக சிறார்கள் நீர் அதிகமாக பருக வேண்டும்என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## கிளிநொச்சி...

குறித்த சிசுவின் சடலம் கிளிநொச்சி பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது,

மேற்படி சிசுவை பொலித்தீன் பையில் சுற்றி வீசியுள்ள சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

அன்னையர் தினத்தினை உலகம் எங்கும் நேற்று கொண்டாடிய நிலையில், அன்னையின் அரவணைப்பில்லாமல் வீசப்பட்டுள்ள குறித்த சிசுவின் நிலை தொடரபில் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

(செ-312,15,281)

## ஐ.நாவின்...

நேற்று முன்தினம் இலங்கையின்நிலைமைகள் தொடர்பாக முன்வைத்துள்ள விமர்சனங்கள் குறித்து அமைச்சரவை பேச்சாளர் ராஜித சேனாரத்ன நேற்று கருத்து வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யுத்த குற்றங்கள் தொடர்பில் உள்ளக பொறிமுறை சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஜூன் மாதம்வாய் மூல அறிக்கை சமர்ப்பிக்கப்படும் நிலையில் அந்த அறிக்கை சர்வதேசத்தை திருப்திப்படுத்தும் வகையிலும் அதே நிலையில் உண்மைகளை கண்டறியும் வகையிலும் பலமான ஒன்றாக அமையும்.

வருட இறுதிக்குள் நிரந்தர தீர்வை எட்டும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதில் உறுதியாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (செ-12)

Architectural CAD Center
Prsonal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo
Auto CAD
2D-drawing & 3D Modeling
Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo
Link:0775116320-0718617972
(4516)

நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
50,000/- வரை வருமானத்துடன்
உடனடி வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE >>> English Course
3 - 4 மாதங்களில்
Up to 30% Discount
. பகுதிநேர / முழு நேர தொழில் ஏற்பாடு.
. வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
100% JOB or VISA Guaranteed
கற்கைநெறி ஆரம்பம் 11th May 2016
அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
முழு விபரங்களுக்கு www.sikaram.lk
SIKARAM ACADEMY
Business • Hospitality • English
SCHOOL of HOSPITALITY
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி. யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)
(C-4567)

விசேட சலுகைகள்
220க்கு மேற்பட்ட உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் சேவைகள்!
வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், உணவுப் பொருட்கள்,
கருவாடு, மருந்து, எண்ணெய் வகைகள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம்
11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kgக்கு மிக குறைந்த கட்டணம்.
Australia - 850/= UK-600/= Canada-900/= France-700/= Germany-650/= Swiss - 850/=
மற்றைய நாடுகளுக்கும் மிகக்குறைந்த கட்டணத்தில் அனுப்பி கொள்ள முடியும்
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
திருமுருகன் கொம்நெற் (PVT) Ltd
271A, K.K.S Road, Jaffna.
46, Aadiyapatham Road, Thirunelvely.
18, பிரதான வீதி, நெல்லியடி.
பிரதான வீதி, பருத்தித்துறை. (பஸ் நிலையம் முன்பாக)
பிரதான வீதி, சங்கானை 021222 7835 (ஆசைப்பிள்ளை நகைக்கடை முன்பாக)
(4512)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.